இவர்களைச் சந்தியுங்கள்

ராஜம்மாள் டிக்கிகஸ்

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய *7* ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் *200* ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8*) உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணைய-தளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

இவர்களைச் சந்தியுங்கள்

(திருமறைப் பாத்திரங்கள்)

நற்செய்திச் செல்வர்

திருமதி. ராஜம்மாள் டிக்கிகஸ்

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்
சென்னை—600 003.

Printed & Published by
THE CHRISTIAN LITERATURE SOCIETY
Post Box 501, Park Town,
Chennai - 600 003.

IVARGAḶAICH CHANDIYUNGAḶ
(Bible Characters)

by RAJAMMAL TYCHICUS
in Tamil

©Best For Christ
First Published in May 2001

விலை ரூ. 12.00

அறிமுகம்

நற்செய்திச் செல்வர் திருமதி. **ராஜம்மாள் டிக்கிகஸ்** அவர்களின் நான்கு நூல்களைக் கடந்த பன்னிரண்டு ஆண்டு காலத்தில் கிறிஸ்தவ இலக்கியச் சங்கம் வெளியிட்டுள்ளது. அந்நூல்கள் யாவும் கிறிஸ்தவ வாசகர்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றுள்ளது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

அவர்களின் ஐந்தாவது படைப்பாக **இவர்களைச் சந்தியுங்கள்** என்னும் இந்நூலை வெளிக் கொணர்கின்றோம். என் அருமைத் தாயார் ஓய்வுநாள் பள்ளி ஆசிரியர்கள், பெண்கள் ஐக்கிய சங்க ஊழியர்கள் மற்றும் கிராமச் சபைத் திருப்பணியாளர்கள் போன்றோருக்கு ஆயத்த வகுப்புக்கள் நடத்தியபோது எழுதிவைத்த முழுமையான பயனுள்ள குறிப்புக்களைக் கொண்டு இந்நூல் உருப்பெற்றுள்ளது. இதனைப் பதிப்பிக்கும் பணியில் பெரிதும் ஈடுபட்டவரும் கிறிஸ்தவ இலக்கிய சங்கத்தின் தமிழ்ப்பதிப் பாசிரியருமான திருமதி. ஸ்வீட்லின் பிரபாகரன் அவர்களுக்கும், அவருக்கு அப்பணியில் துணைநின்ற திருமதி. பிரியா ஜெயசீலனுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வாசகர்களின் ஆன்மீகத் தியானத்திற்கு உறுதுணையாக அமையும் என்ற நம்பிக்கையோடு வெளியிடப்படுகின்றது.

கிறிஸ்துவுக்குள்,

சென்னை
11.5.2001

டாக்டர் **தி. தயானந்தன் பிரான்சிஸ்**

பொருளடக்கம்

		பக்க எண்
1.	நாயினூர் விதவை	-- 1
2.	பெரும்பாடுள்ள ஸ்திரீ	-- 3
3.	நாகமான்	-- 5
4.	குளக்கரை மனிதன்	-- 8
5.	சமாரியப் பெண்	-- 10
6.	நல்ல சமாரியன்	-- 14
7.	ஒரு வெள்ளிக்காசை இழந்தவள்	-- 20
8.	யெப்தாவின் மகள்	-- 23
9.	அன்னாள்	-- 24
10.	பத்து கன்னிகைகள்	-- 25
11.	சகேயு	-- 26
12.	தீமோத்தேயு	-- 27
13.	ஐந்து அப்பம் இரண்டு மீன் சிறுவன்	-- 29
14.	வலிப்பு வந்த பையன்	-- 31
15.	பலவகையான சீஷர்கள்	-- 33
16.	நான்கு தொழுநோயாளிகள்	-- 37
17.	மூன்று ஞானிகள்	-- 42
18.	சகரியாவும் எலிசபெத்தும்	-- 47
19.	மகதலேனா மரியாள்	-- 50
20.	சேபாவின் ராஜஸ்திரீ	-- 52
21.	கிறிஸ்துவும் மாதரும்	-- 55
22.	திருச்சபையும் ஸ்திரீகளும்	-- 58

1. நாயீனூர் விதவை

லூக்கா 7:11–17

முக்கிய குறிப்புகள்

1. கர்த்தர் இரக்கமும் உருக்கமும் உள்ளவர், தேற்றுகிறவர்.

அ. விதவைகள் மேல் அதிகக் கருணையுள்ளவர்.

ஆ. கண்ணீர் விடுவதைக் காண விரும்பாதவர்.

எருசலேமின் மாதர்கள், லாசருவின் கல்லறை நிகழ்ச்சி ஆகியவை இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

2. மாண்டவனை உயிருள்ள வாலிபனாகத் தாயிடம் ஒப்புவித்தார்

அ. தாயின் அன்பு அவருக்குத் தெரியும்.

ஆ. தம் தாயிடம் தம் உயிர் பிரியும் நேரமட்டும் இயேசு அன்பைக் காட்டினார்.

நம் இளைஞர்கள் பொல்லாதவராகும்போது மாம்ச இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமையாகிய மரண பாடையினின்று எழ முடியாதவர்களாகச் செத்தவர்களாயிருக்கிறார்கள். நாம் மற்றோரிடம் இதைச் சொல்லித் துக்கப்படுவதைக் காட்டிலும் கடவுளிடம் அழுவோமானால் நம் கண்ணீரை அவர் பார்த்து நமக்கு இரங்கி அவர்களை உயிர்ப்பிப்பார்.

3. மரித்தவன் எழுந்து பேசத்தொடங்கினான்.

பாவ மரணத்தினின்று உயிர்ப்பிக்கப்பட்ட பிள்ளைகள் பாவ

மன்னிப்படைந்து கடவுளை ஏற்றுக்கொண்டு சாட்சி கொடுப்பார்கள். இதையே ஆண்டவர் விரும்புகிறார்.

முடிவுரை

வாலிபர் மனந்திரும்புதல் கடவுளுக்கு அதிகப் பிரியம்.

"வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" (பிரசங்கி 12:1).

தம்முடைய ஒரே வாலிபப் பிள்ளையை இழந்த தாய், தமக்குச் சிலர் தேறுதல் செய்ய வந்தபோது "கிறிஸ்து எனக்காக மரித்தார். என் மகன் கிறிஸ்துவுக்காக மரித்தான்" என்றும் "இன்னும் பிள்ளைகளிருந்தால் கூட அவர்களையும் இரத்த சாட்சிகளாகத் தேவ ஊழியத்திலே விட்டிருப்பேன்" என்றார்.

2. பெரும்பாடுள்ள ஸ்திரீ

லூக்கா **8:41–48**

மாற்கு **5:25–34**

முக்கிய குறிப்புகள்

1. ஸ்திரீகளின் பல வியாதிகளில் இது மிக பயங்கரமும் அசுத்தமும், வேதனையுண்டாக்குகிறதுமான வியாதி. அநேகர் இதனால் மரித்ததுண்டு. இப்பெண் பெரிய விசுவாசமுள்ளவள். இயேசுவை உறுதியாய் நம்பினாள். விசுவாசத்திற்குப் பயமில்லை. விசுவாசம் துணிவுள்ளது. விசுவாசத்தோடு கிரியை நடப்பித்து இரட்சிக்கப்பட்டாள்.

2. ஸ்திரீகளும் புருஷரைப் போலச் சாட்சி சொல்ல ரட்சகர் விரும்புகிறார். வெட்கப்படாமல் தைரியமாய் ரகசியமாய்ப் பெற்ற நன்மைகளைச் சாட்சியாக அறிவிக்க வேண்டும். கடவுளுக்கு மறைவானது ஒன்றுமில்லை. யோனா கடவுளை விட்டு விலக நினைத்தான். முடியவில்லை. தாவீது ராஜா இந்த உண்மையை 139–ஆம் சங்கீதத்தில் கூறுகிறார். அநேகர் விசுவாசத்தால் திரளான நன்மைகள் பெற்றும், அறிக்கையிடாததால் பூரண ரட்சிப்பைப் பெறாமல் போகிறார்கள். நாம் அறிக்கையிட்டால் ஆண்டவர் மகிமைப்படுவார். மற்றவர்களுக்கு ரட்சிப்புண்டாகும்.

"நான் உம்மைப் பற்றி ரட்சகா
வீண் வெட்கமடையேன்
பேரன்பைக் குறித் தாண்டவா
நான் சாட்சி கூறுவேன்"

முடிவுரை

"விசுவாசித்தவளே பாக்கியவதி"

"அவர் பாதமே அடைக்கலம். அவரே நம் பரிகாரி"

"என்னிடம் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை"

"கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்திலே அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள்"
(ஏசாயா 55:6)

நம் தேவையை அவர் அறிவார். தகுதியானால் தருவார்.

3. நாகமான்

2 ராஜாக்கள் 5:1–15

முக்கிய குறிப்புகள்

இஸ்ரவேல் தேச அடிமைப்பெண்

1. அந்நிய நாட்டிலே தேவனைப் பிரசித்தப்படுத்தினாள்.

2. எஜமானின் சரீர சுகம் தேடினாள்.

3. எஜமானின் ஆத்ம ரட்சிப்புக்கு வழிகோலினாள்.

நாம்,

1. பெரியவர்களாயிருந்தும் கர்த்தரைப் பிரசித்தம் செய்கிறோமா?

2. விக்கிரக ஆராதனைக்காரர் மத்தியில் அவரை அறிக்கை செய்கிறோமா? அவருக்குச் சாட்சி கூறுகிறோமா?

3. நாம் அறிந்ததை மற்றவர்கள் அறியவும் அனுபவிக்கவும் அறிக்கை செய்யவும் பிரயோஜனமாயிருக்கிறோமா?

4. சிறையாக்கப்பட்ட பெண், தன் வேலையின் மத்தியிலே தைரியச் சாட்சி கொடுத்தாள்.

5. சிலர், இவ்வித வேலையை வாலிபர் எப்படிச் செய்யக்கூடும் என்பார்கள். முதிர் வயதில் தேவ ஊழியம் செய்ய விரும்புகிறார்கள். நாளை உன்னுடையதல்லவே, முதிர் வயது எவ்வளவு நிச்சயம்?

நாகமான்

இந்நிகழ்ச்சியை ஆண்டவர் எடுத்துச் சொல்லும்போது சீரியாவிலே எத்தனையோ தொழுநோயாளிகள் இருந்தும் "நாகமான் மாத்திரம்" சுத்தமாக்கப்பட்டான் என்கிறார். (லூக் 4:27)

1. சிறுமி நாகமானின் சுத்தாங்க நாட்டத்தையறிந்து வழிகாட்டினாள். இருதயச் சுத்தாங்கம் ஆசிக்கிறவர்களுக்கு நாம் கிறிஸ்துவையும் அவர் வசனத்தையும் காட்டிப் போதிக்க வேண்டும்.

2. சுத்தமாவதற்கு யோர்தான் நதி ஒன்றே நாகமானுக்கு உதவியது. நாம் பாவ சுத்தியடைய இயேசுவின் இரத்தம் ஒன்றைத் தவிர வேறு ஏதுமில்லை.

1. பாவம் போக்கும் ஜீவநதியைப் பாராய்!

2. பாவ தோஷம் நீங்கிட மீட்பரின் இரத்தம்தானே!

3. நதியுண்டு நதியுண்டு நமக்கு (இப்பாடல்களைப் பாடி மகிழ்வோம்)

நாகமான் முதலில் அசட்டை செய்தான். அசட்டையாகவே இருந்திருந்தால் சுத்தம் இல்லை. நாமும் பாவத்தைக் குறித்து நிர்விசாரமாயிருந்தால் பாவப்பிணி தீர வழியில்லை.

வேலையாட்கள் பேச்சைக் கேட்டான். கீழ்ப்படிந்தான் – சுகமானான். நாமும் தேவ ஊழியர் – பெரியோரோ சிறியோரோ சொல்வதைக் கேட்டு நடப்போமானால் இரட்சிப்படைவோம்.

கேயாசி

1. பேராசை பெரும் நஷ்டம், பண ஆசை எல்லாப் பாவங்களுக்கும் வேர்.

2. "நீர் என்னைக் காண்கிற தேவன்" – கடவுள் கண்ணுக்கு மறைய முடியாது.

3. மனிதனை வஞ்சித்தல் தவறு. உன் பாவம் உன்னைத் தொடர்ந்து பிடிக்கும்.

4. தான் வெட்டின .... விழுவான்

எந்த அளவினால் .... அளக்கப்படுவாய்

விதை ஒன்று .... முளைக்குமா?

பழிவாங்குதல் .... பதில் செய்வேன்

(வெற்றிடங்களை நிரப்புக)

4. குளக்கரை மனிதன்

யோவான் 5:1–15

முக்கிய குறிப்புகள்

இயேசு அற்புத பரிகாரி. அவர் செய்த மற்ற சில அற்புதங்களை நினைவு கூரலாம். குணமாக்கப்பட்ட வியாதியஸ்தரைப் பற்றி மாணவர்கட்குக் கூரலாம். கோவில், குளம், மலைகளின் சிறப்புக்களையும் சொல்லலாம்.

1. இயேசு நன்மை செய்கிறவராகவே சுற்றித் திரிந்தார்.

   வியாதியஸ்தர் மேல் அவருக்கு அனுதாபம் உண்டு.

   பல வியாதியஸ்தர் சுகமடைந்தனர். வியாதி, அங்கவீனம், தொழுநோய், அசுத்த ஆவி ஆகியவை அவரால் குணமாக்கப்பட்டன.

2. சிருஷ்டிகரான கடவுளுக்குச் சிருஷ்டிகள் மேல் அதிகாரம் உண்டு. அவர் யாவுக்கும் எல்லையைக் கட்டளையிட்டார். அவர் சொல்ல ஆகும், கட்டளையிட நிற்கும். சகலமும் அவர் வல்லமைக் கடங்கினதே.

3. விசுவாசித்தால் சகலமும் பெற்றுக் கொள்ளலாம். "உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும்" (விசுவாசமுள்ளவனின் விசுவாசம் அதிகரிக்கப்படும்)

4. ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க வேண்டும். ஓய்வு நாளில் நன்மை செய்வது தவறாகாது. எத்தகைய நன்மைகளை உடனுக்குடனே செய்ய வேண்டும் என்பதை ஆண்டவர் நமக்கு வெளிப்படுத்துவார்.

5. சாட்சி பகருதல் – நாம் அடைந்த நன்மைகளை மற்றோரும் அடைய வேண்டும்.

அதிகக் கேடானதொன்றும் .... பாவம் செய்யாதே. சகல துன்பங்களுக்கும் காரணம் பாவமே. "பாவத்தின் சம்பளம் மரணம்" (ரோமர் 6:23)

"கிறிஸ்து எனக்கு ஜீவன். சாவு எனக்கு ஆதாயம்" (பிலி 1:21) "சொஸ்தமாக வேண்டுமென்று விரும்புகிறாயா?"

தேவையை அறிந்தார். விருப்பம் உண்டென்று கண்டார். குணமளித்தார். நம்மிடமும் இன்று இதே கேள்வியைக் கேட்கிறார். நாமும் பலவித குறைவுகள் மற்றும் பாவங்களினால் நடக்கக் கூடாதவர்களாயிருக்கிறோமா? இன்று அவரிடம் அறிக்கையிட்டுச் சுகமடைவோம். நம் பாவமே இதற்குக் காரணமாகையால் அவ்வகளை வேரோடே பிடுங்கி அகற்றுவோம். அவைகளை ஒவ்வொன்றாய் எண்ணிப் பார்ப்போம். பாவ உணர்ச்சி நமக்குத் தேவை.

5. சமாரியப் பெண்

யோவான் 4:1–30

முக்கிய குறிப்புகள்

கீழ் ஜாதியார் என யூதரால் இகழப்பட்டோர் சமாரியர். கலப்பு ஜாதியார். சமாரியர் விக்கிரக ஆராதனைக்காரர். யூதர் சமாரியாவைக் கடந்து செல்வதில்லை. சமாரியரோடு உரையாடுவதும் இல்லை.

சமாரிய ஸ்திரீ

இரண்டு காரியங்களுக்காக இகழப்பட்டவள்

1. சமாரிய ஸ்திரீயானதால்

2. ஒரு ஸ்திரீயே யானதால். யூதர் பெண்களை அதிகக் கேவலமாக எண்ணுவார்கள். பொது இடத்தில், தெருக்களில் மனைவியையுங் கூட வாழ்த்த மாட்டார்கள். தேவாலயத்தில் யூத ஆண்கள் ஜெப பாகம் :

   "என்னை ஸ்திரீயாக சிருஷ்டிக்காததால் ஸ்தோத்தரிக்கிறேன்". பெண்கள் ஒதுக்கி வைக்கப்பட்ட இடத்திலிருந்து, "உமது சித்தப்படி என்னை சிருஷ்டித்ததால் ஸ்தோத்திரிக்கிறேன்" என்பார்கள். இதுவே ஒன்பதாம் வசனத்தின் அர்த்தம் : "நீர் யூதன் – நான் சமாரிய ஸ்திரீ".

3. *சீகார்* கிணறு – அது மிகவும் ஆழமானது. எழுபத்தைந்து அடி வரைக்கும் ஆழமான புராதன கிணறு. யாக்கோபின்

காலத்திலிருந்து அதில் தண்ணீர் சுரந்து கொண்டே இருந்தது. ஆயிரமாண்டுகளாக மக்களும் மிருகங்களும் தாகந் தீர்த்துக் கொண்டு வந்த மேலான ஊற்றுக்கிணறு.

4. கிறிஸ்துவின் அணுகுமுறை : படிப்படியாய் விளக்கிச் செல்கிறார்.

அ. யூதன் என்று தம்மைக் காட்டினார்.

ஆ. யாக்கோபிலும் பெரியவராகக் காட்டினார்.

இ. தீர்க்கதரிசியாகக் காட்டினார்.

ஈ. மேசியாவாக வெளிப்படுத்தினார்.

ஆத்தும ஆதாயம் படிப்படியாய் செல்ல வேண்டியதாகும்.

மேலும் சில குறிப்புகள்

(அழிவுள்ளது – அழியாதது, திருப்தியற்றது – திருப்தியுண்டு பண்ணக்கூடியது)

1. ஆத்ம தாகமில்லாத அவளுக்கு அதை உண்டாக்கினார்.

"நான் கொடுக்கும் .... தாகமடையான்" 10–14. ஆவியின் தண்ணீரைப் பற்றிப் பேசிப் பூலோகத் தண்ணீரை மறக்க வைத்தார்.

2. ஜீவத் தண்ணீராகிய அவரை வாஞ்சிக்க வைத்தார். ஆனால் பரிசுத்த ஆவி அசுத்த ஜீவியமுள்ள இதயத்தில் வந்து தங்கவே மாட்டார். ஆதலால் புருஷன் பேச்சைத் துவங்கி பாவ ஜீவியத்தை மாற்றினார்.

நாமும்,

அ. மனம் மாற வேண்டும்.

ஆ. உண்மையை ஆண்டவரிடம் அறிக்கையிட வேண்டும்.

இ. அறிக்கையிட்டால் மன்னிப்புக் கிடைக்கும்.

"தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான். அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான்".

எந்தவிதப் பாவமானாலும் அக்கிரமமானாலும் உள்ளத்தில் இருந்தால் ஜீவத்தண்ணீர் ஊற்றப்பட மாட்டாது.

ஆகான் கல்லெறியப்பட்ட பிறகே ஜெயம்.

யோனா கடலிலெறியப்பட்ட பிறகே கடல் அமர்ந்தது.

3. சமாரிய ஸ்திரீயிடம் துன்மார்க்கம் ஒரு பக்கம். மூடபக்தி மற்றொரு பக்கம்.

(யாக்கோபு மலைகளில் தொழுதல்)

இரண்டு தீமைகள் (எரே 2:13)

1. ஜீவத் தண்ணீர் ஊற்றாகிய என்னை (கிறிஸ்துவை) விட்டுவிட்டார்கள்.

2. தண்ணீர் நிற்காத வெடிப்புள்ள தொட்டிகளை வெட்டிக் கொண்டார்கள். கிறிஸ்து நம்மில் மகிமைப்பட வேண்டுமானால் அவரை ஏற்றுக்கொண்டு பாவம், மாயம், உலக உல்லாசம், மாம்ச

ஆவி, உலக இச்சை டம்பம், வீண் சடங்கு ஆகிய வெடிப்புகளை நீக்க வேண்டும்.

முடிவுரை

ஜீவத் தண்ணீரை அனுபவிப்போர் ஆத்துமாக்கள் பேரில் தாகம் அடைவர். அவள் ஓடிச் சாட்சி கூறி அநேகரை அவர் பாதத்தில் கொண்டுவந்தாள்.

பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்ட இருதயமுள்ளோர் சும்மா இருக்க முடியாது. "ஆவியினால் நிறைந்திருங்கள்"

"பக்தரே உற்சாகத்தோடே எழும்பிப் பிரகாசிப்பீர். ஆத்துமாக்கள் ஏசுவண்டை வந்து சேர உழைப்பீர்!"

"ஓ தாகமாயிருக்கிறவர்களே .... ஏற்படுத்துவேன்" (ஏசா 55:1–3) "ஒருதரம் இந்த நதியின் தீர்த்தம் உண்டோர் ஜீவன் கண்டோர்" – பாவம் போக்கும் ஜீவ நதி.

இயேசுவைச் சமாரியர் ஏற்றுக் கொள்ளாத ஒரு சமயத்தில் யாக்கோபும் யோவானும் எலியா செய்ததுபோல அக்கினி வருவித்து அழித்துப் போடும் என்றார்கள். ஆண்டவர் அப்படிச் செய்கிறவரல்ல. அழிக்க அல்ல, ரட்சிக்கவே அவர் வந்தார். ஒரே ஸ்திரீயின் மூலமாய் ஒரு நாட்டுக்கு மீட்பு அருளினார்.

6. நல்ல சமாரியன்

லூக்கா 10:25–37

முக்கிய குறிப்புகள்

எருசலேமிலிருந்து எரிகோ செல்லும் பாதை பயங்கரமும் அபாயமும், கள்ளரால் நிறைந்ததுமானது. எரிகோ ஆசாரியப் பட்டணமாகையால் எருசலேமிலிருந்து எரிகோவுக்கு ஆசாரியர் இப்பாதையை உபயோகிப்பதுண்டு. இயேசு தினசரி ஜீவியத்திலிருந்தே யாவரும் அறிந்த காரியங்களினின்றே தம் உவமைகளையும் உபதேசங்களையும் கூறினார்.

சூழ்நிலை

நியாய சாஸ்திரியின் தர்க்கம். அவனிடமிருந்தே சகலத்தையும் வருவித்தார். கட்டளையையும் கொடுத்தார். வச 28, 37. "நீயும் போய் அந்தப்படியே செய்"

படிப்பினைகள்

1. பிறன் யார்? இப்படிக் கேட்ட நியாய சாஸ்திரிக்கு இயேசு தரும் விளக்கம் : நல்ல ஆவியையுடையவன், தன் சேவையைத் தேவையான இடத்தில் உடனே செய்வான். பிறன் பெரிய காரியமல்ல. பிறனுக்காக உண்மையான அன்போடு செய்யும் கிரியையே பெரியது.

2. மற்ற உவமைகளைப் போல ஒப்பிட்டுப் பேசும் உவமை இதல்ல. திராட்சத் தோட்டம், தாலந்து, நல்ல நிலம் போன்றவை. இது செய்ய வேண்டியதைத் தெளிவாய்க் கூறும் உவமை. "நீயும் போய் அப்படியே செய்". நாம் எவைகளைத் தள்ளி (ஆசாரியன், லேவியன் போல) எவைகளை உயர்த்தி (சமாரியன்) மெய்யான

அன்பைப் பிறனில் காட்ட வேண்டுமென்று இவ் உவமை கற்பிக்கிறது.

3. நீயும் போய் அப்படியே செய். அநேகச் சந்தர்ப்பங்களில் கஷ்டங்களை நிவிர்த்திக்க நம்மால் கூடிய சமயத்தில்

அறிவீனரை அறிவுறுத்தக்கூடிய சமயத்தில் –

தாழ்ந்தோரை நாம் உயர்த்தக்கூடிய சமயத்தில் –

ஆதரவற்றோரைக் காப்பாற்றக்கூடிய சமயத்தில் –

எங்கே இருந்தாலும் எப்படி இருந்தாலும், யாராயிருந்தாலும் நம்முடைய அயலானைக் கண்டுகொள்ள வேண்டும். ஆண்டவர் இன்று நமக்களிக்கும் கட்டளை "நீயும் போய் அப்படியே செய்" என்பதே.

மேலும் சில குறிப்புக்கள்

1. "நல்ல சமாரியன் நல்ல ஆவியையுடையவன்" ஆசாரியன், லேவியனைப் போல கட்டளைகளுக்கு மட்டும் கீழ்ப்படிந்தவனல்ல. கட்டளைகளில் இப்பேர்பட்ட உதவியைக் குறித்து சொல்லப்பட்டிருக்குமானால் ஆசாரியனும் இலேவியனும் உடனே செய்திருப்பார்கள். பிறனை நேசிப்பதில் பிறன் யார் என்பதை உணராதிருந்தனர். பரிசுத்த ஆவியால் கற்பிக்கப்பட்டு இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவோர், கஷ்டப்படுகிறவர்கள் யாவரும் நம்முடைய அயலார்கள் என்றும், அவர்களுக்கு அன்போடு உதவி செய்வது நமது கடமை என்றும், செய்யாவிடின் கடவுளைக் கனவீனப்படுத்துகிறோமென்றும் தெரிந்துகொள்ள வேண்டும்.

"இரக்கமுள்ளவர்கள் .... இரக்கம் பெறுவார்கள்"

2. சாதியும், மார்க்கமும் அவனது அன்பின் கிரியையைத் தடுக்க முடியவில்லை. மனிதனின் தேவை சாதி விரோதத்தை மாற்றிவிட்டது. தாராளமான, அன்பு நிறைந்து உதவி செய்யும் கிரியையைச் சில வேளைகளில் நம்முடைய கேவலமான சுபாவங்கள் மாற்றிவிடுகிறது. ஜீவனத்தின் பெருமை, சாதி பேதம், சுயநலம், குடும்பப் பெருமை, பணப் பெருமை கொண்டு யாரையும் கீழானவர்களாகவும் கேவலமானவர்களாகவும் எண்ணக்கூடாது. "ஆகாது என்று தள்ளின கல்லே மூலைக்குத் தலைகல்லாயிற்று".

சிறை வாசத்தாலேயே ஜான்பனியன் "மோட்ச பிரயாணம்" நூலை எழுதினார். சிறையிலிருந்தபோது பவுலின் சில நிருபங்கள் எழுதப்பட்டன.

3. அவனுடைய சொந்த சௌகரியங்கள் அவன் செய்யக்கூடிய உதவியினின்று அவனைத் தடுக்கக் கூடவில்லை.

அ. பொழுதுபோகுதல் – தான் எரிகோ சேரவேண்டும்.

ஆ. மற்றோருக்கு நேரிட்ட தீமைக்குத் தன்னையே சந்தேகிப்பார்கள் என்ற எண்ணம்.

இ. அவனைப்பிடித்த கொள்ளைக்காரர் தன்னையும் அப்படியே செய்யக் கூடுமென்ற பயம்.

ஈ. அம்மனிதனது முழுத் தேவையையும் தான் ஒருவனே பூர்த்தி செய்ய இயலாது என்ற எண்ணம்.

என்ன நேரிட்டாலும் "தன்னால் இயன்றதைச் செய்தான்"

"நன்மை செய்ய .... செய்யாமலிராதே" (2தெச 3:13)

நம்முடைய தருமங்களெல்லாம் இந்த அன்பின் கிரியைக்கு நிகராக முடியாது.

பெயர் பெருமைக்கும், மெச்சுதலுக்கும், பிரதிபலனுக்கும் செய்யும் உபகாரம் அன்பின் உதவியாகுமா?

பூரண அன்பின் கிரியை தற்பிரதிஷ்டையோடே விளங்கும். "இந்தச் சிறியோரில் யாருக்கு .... எனக்கே செய்தீர்கள்" ஒரு கலசம் தண்ணீருக்கும் கடவுள் பதிலளிப்பார்.

4. தேவையான உதவியை உடனே செய்தான். செய்ய வேண்டியதை உடனே செய்ய வேண்டும்.

"உன்னிடத்தில் பொருள் இருக்கும்போது .... நாளைக்கு தருவேன் என்று சொல்லாதே" (நீதி 3:28).

ஸ்காட்லாந்து தேசத்து ஜான்

"மனுஷர் உங்களுக்கு எப்படிச் செய்ய வேண்டுமென்று விரும்புகிறீர்களோ, அப்படியே நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (லூக். 6:31)

அநேக ஆண்டுகளுக்கு முன்னே, ஸ்காட்லாந்து தேசத்திலே சிறந்த குணங்களுடைய தனவந்தர் ஒருவர் தம்முடைய பெரிய மாளிகையிலே வசித்து வந்தார். அவர் வீட்டின் அருகே ஏராளமான கோதுமை வயல்கள் இருந்தன. இந்தக் கோதுமை வயல்கள் ஜான் என்னும் ஒரு விவசாயினுடையதாயிருந்தன. அனுதினமும் விவசாயி வயலில் வேலை செய்வதை இத் தனவந்தர் தம் மாளிகையின் மாடியிலிருந்து கண்ணோக்குவார். ஜான் வயல் வேலையை முடித்து வீடு திரும்பும் சமயம், சில வேளைகளில் அவரைச் சந்திப்பார். அப்பொழுது ஜான் அதிகத் தாழ்மையோடே வந்தனமளித்துச் செல்வதுண்டு.

ஒரு சமயம் ஜான் தன் வயலில் விளைந்த கோதுமையிலிருந்து ஒரு பாகத்தை ஒரு பெரிய மூட்டையாகக் கட்டி, பாரமான அம்மூட்டையை மற்றும் சிலருடைய உதவியைக் கொண்டு தன் குதிரையின் மேலே ஏற்றிக்கொண்டு, அநேக மைல் தூரத்திலுள்ள ஒரு இயந்திர சாலைக்குப் புறப்பட்டுப் போனார். வழியோ தனிப்பட்டதாயிருந்தது.

பொழுதும் சாய்ந்தது. ஜான் சீக்கிரமாக இயந்திர சாலையயடையும்படி குதிரையை வெகு வேகமாக ஓட்டினார். அதிவேகமாகக் குதிரை ஓட ஆரம்பித்தது. கோதுமை மூட்டை கட்டு அவிழ்ந்து குதிரைமீதிருந்து கீழே விழுந்தது. ஐயோ பாவம்! ஜான் என்ன செய்யக்கூடும்? மூட்டை அதிகபாரம். உதவி இல்லாமல் தான் மறுபடியும் மூட்டையைக் குதிரை மீதேற்ற இயலாது. பொழுதும் வேகமாகச் சாய்ந்து கொண்டே வந்தது. பாதையிலோ ஆள் உருவம் ஒன்றுமே காணப்படவில்லை. வழிபறிப்போர் கையில் அகப்பட்டுக் கொண்டால் என்ன செய்வதென்ற கவலை மனதை வதைக்க ஆரம்பித்தது. ஜானின் கண்கள் கவலை நிறைந்து நாலா பக்கமும் நோக்கிக் கொண்டே இருந்தன.

அச்சமயத்திலே ஏதோ குதிரை வரும் சத்தம் ஜான் காதுகளிலே கேட்டது. குதித்தெழுந்தார் ஜான். எப்படியாகிலும் பாதையில் வருபவருடைய உதவியைக் கொண்டு மூட்டையை மீண்டும் குதிரை மேலேற்றலாம் என்ற நம்பிக்கையும் சந்தோஷமும் உண்டானது. குதிரையும் ஆளும் எப்போது தென்படுவர் என்ற ஆவலுடன் எதிர்நோக்கினார். ஆனால், குதிரை மீதேறி வந்தது யார்? தன் தோட்டத்திற்கு அருகாமையிலுள்ள தனவந்தரே வரக் கண்டார் ஜான். ஜான் மனம் துக்கமடைந்தது, வேதனை அதிகரித்தது. அவ்வளவு பெரிய தனவந்தரை நான் எப்படி வேலைக்கு ஏவுவேன்? என்ற சஞ்சலத்தோடே நின்றார் ஜான். வேறுபட்ட முகத்துடன் நிற்கும் ஜானைக் கண்ட தனவந்தர் உடனே குதிரையினின்று இறங்கிக்

காரியம் என்ன என்று வினவலானார். ஜானுக்கோ காரியத்தைக் கூறவும் நாவெழும்பவில்லை. பின் தனவந்தர் ஜானுடைய காரியத்தை ஊகித்துக் கொண்டவராய்ச் சந்தோஷமாக, 'அப்படியானால் ஜான் நான் உன்னோடே இம்மூட்டையைக் குதிரை மீதேற்றுவேன்' என்று கூறிக் கொண்டே மூட்டையை இருவருமாகக் குதிரை மீதேற்றினார்கள்.

ஜானுடைய மனதின் சந்தோஷத்திற்களவே இல்லை. தன் இருதயம் நன்றியால் நிரப்பப்பட்டு, ஜான் தனவந்தரைப் பார்த்து, 'ஐயா! நீர் பெரிய தனவந்தராச்சுதே. நீர் செய்த இப்பேருபகாரத்திற்கு யான் என்ன கைமாறு செலுத்தக்கூடும்' என்று தாழ்ந்த சத்தத்தில் கூறினார். தனவந்தர் சிரித்துக் கொண்டே, "ஏன் ஜான், நீ எனக்கு அதிக சுலபமாகப் பதில் செய்ய உன்னால் கூடும். இதேவிதமான கஷ்டத்திலிருப்போருக்கெல்லாம், நீ உதவி செய்யும்போது, அதை நீ எனக்கே செய்தாய் என்று எண்ணிக்கொள்" என்று கூறிச் சென்றார். ஜான் துரிதமாகத் தன் வேலையை முடித்துக்கொண்டு வீடு திரும்பினார்.

"இயேசு அவனை நோக்கி, நீயும் போய் அந்தப்படியே செய் என்றார்' (லூக்.10:37)

"அதற்கு ராஜா பிரதியுத்தரமாக, மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்." (மத். 25:40)

"நன்மை செய்யும்படி உனக்குத் திராணி இருக்கும்போது, அதைச் செய்யத் தக்கவர்களுக்குச் செய்யாமல் இராதே" (நீதி. 3:27)

தங்க வசனம்

மத். 7:12

7. ஒரு வெள்ளிக்காசை இழந்தவள்

லூக்கா 15:8–10 ; மத் 10:42

முக்கிய குறிப்புகள்

கிழக்கத்திய ஸ்திரீகளின் வழக்கங்கள்

தலையணிகலம் காசுகளாலானது. பெரிய காசுகள், ஓரத் தொங்கல்கள் தலைமுறை தலைமுறையாகப் பெண் பிள்ளைகளுக்குத் தாயுடைய சொத்து. புருஷனுக்குப் பங்கில்லை.

கிழக்கத்திய வீடுகள்

அக்காலத்தில் சுத்தம் குறைவு. குப்பை நிறைந்த தரையில் பணம் பதியக்கூடும். சன்னல் இல்லா வெளிச்சமற்ற வீடுகள். சில வீடுகளில் சன்னல் இருந்தும் சித்திர வேலையால் வெளிச்சம் அடைபட்டிருக்கும். அங்குக் காணாமற் போவதை விளக்கைக் கொண்டும் துடப்பத்தைக் கொண்டுமே தேடவேண்டும்.

சூழ்நிலை

பாவிகள் ஆயக்காரர் ஆண்டவரோடே இருந்ததைக் கண்ட பரிசேயரும் வேதபாரகரும் முறுமுறுத்து இவர் பாவிகளை ஏற்றுக்கொண்டு அவர்களோடே பந்தியிருக்கிறார் என்று கேவலமாய்ச் சொன்னபோது ஆண்டவர் இவ்வுவமைகளைக் கொண்டு ஓர் ஆட்டின் மூலமாயும் ஒரு காசின் மூலமாயும் இவ்வளவு சந்தோஷம் உண்டானால் இவைகளிலும் விசேஷமான பாவியின் குணப்படுதலால் எவ்வளவு சந்தோஷம் பரலோகத்தில் உண்டாகுமென்பதை விளக்குகிறார்.

கதையின் நான்கு பாகங்கள்

1. காணாமல் போதல் 2. தேடல் 3. கண்டுபிடித்தல்
4. சந்தோஷப்படுதல்

காணாமல் போதல் – காசு காணாமல் போனது. ஒரு உயர்ந்த துண்டு லோகமல்ல. ஆனால் அந்த லோகம் வார்த்து அடிக்கப்பட்டு முத்திரையுடையது. முத்திரை மதிப்பைக் கொடுக்கிறது. விரோதிகள் கேள்விக்குக் கடவுளின் பதில். "ராயனுடையதை ..... செலுத்துங்கள்" கடவுளுடைய கட்டளை மாற்கு 12:17. பணம் ராயனுடையது – மனிதன் கடவுளுடையவன். அவர் சித்தத்தைச் செய்ய, நோக்கத்தை நிறைவேற்ற அவர் அழகாகத் தம் சாயலாக உருவாக்கினார். மனிதன் இதை நிறைவேற்றத் தவறினான். இதுவே நம் காணாமல் போன நிலமை.

1. **ஆனால் பணம் காணாமல் போனால்**

காணாமல், மறைந்த நிலமையில் உடையவனுக்குப் பணம் பிரயோஜனமல்ல. அப்படியே பாவநிலமையில் பாவியும் கடவுளுக்குப் பிரயோஜனமுள்ளவனல்ல. கடவுளை மகிமைப்படுத்தாமலும் அவருக்குச் சேவை செய்யாமலும் கிடக்கிறான்.

2. **காணாமற்போன நிலமையிலும் பணம் மதிப்புள்ளதே**

பாவ நிலமையிலும் பாவி மதிப்பற்றவனல்ல. காசு, துரு, அழுக்கு, மண் மூடினாலும் சுத்தப்படுத்தப்பட்டால் அது வெள்ளி நாணயமே. அதன் மதிப்பும் குறையாது. அப்படியே பாவியும் விசேஷித்தவனே. குணப்பட்டால் அவன் அதிக விசேஷித்தவன். சிருஷ்டிப்பில் சிறந்தவன். இணையற்றவன் சங் 8:4–8

3. **தேடிக் கண்டடையக்கூடும்**

கண்டடையக்கூடும் என்ற நம்பிக்கையால் தேடினாள், கண்டடைந்தாள். பாவியும் மனந்திரும்பக்கூடும் என்றதாலேயே இரட்சகர் நம்மைத் தேடி இரட்சிக்க உலகில் வந்தார்.

4. **தேடல்**

உடமைக்குச் சொந்தக்காரியே பொருளைத் தேடுகிறாள்.

மேய்ப்பனே ஆட்டைத் தேடுகிறார். இரட்சகரே பாவியைத் தேடி வருகிறார். சிலுவை என்னும் காந்தத்தாலே நம்மை இழுத்துக் கொள்ளுகிறார். "நான் பூமியிலிருந்து உயர்த்தப்பட்டிருக்கும் போது எல்லாரையும் என்னிடத்தில் இழுத்துக் கொள்ளுவேன்" (யோவான் 12:32) "விசுவாசிக்கிறேன் கர்த்தாவே என் அவிசுவாசம் நீங்க எனக்கு உதவி செய்யும்" (மாற்கு 9:24).

5. சந்தோஷப்படல்

கண்டுபிடிக்கப்பட்ட ஒரே ஆட்டுக்காகவே கண்டு பிடிக்கப்பட்ட ஒரே காசுக்காகவே யாவரோடும் சந்தோஷம் கொண்டாடப்பட்டது. பத்திரமாய்ப் பாதுகாப்புக்குள்ளிருந்தவைகளைக் குறித்தல்ல. அதே விதமாகவே ஆண்டவர் மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் பரலோகத்திலே தூதர் முன்பதாக மிகுந்த சந்தோஷம் உண்டாகிறது என்கிறார். பரலோகத்திலே நம்மால் உண்டாகும் சந்தோஷமானது நமக்கு இரட்டிப்பாய்க் கிடைக்கவும் எப்போதும் நிலைக்கவும் தக்கதாய் நாம் ஜீவிக்க வேண்டும். நாம் பெற்று அனுபவிக்கும் பாக்கியமான சுவிசேஷத்தை, இரட்சிப்பை மற்றவர்களோடும் பகிர்ந்து கொள்ளப் பிரயாசப்படுவோமாக. ஜீவிய முழுமையும் சாட்சி கூறி, ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி அவர்களாலும் நம்மாலும் பரலோக இராஜ்ஜியத்திலே மிகுதியான சந்தோஷத்தை உண்டாக்கப் பிரயாசப்படுவோமாக. இப்படி ஜீவியத்தை நடத்திப் பரலோக இராஜ்ஜியத்திற்கு நாம் போகும்போது தூதர், தூயர் சந்தோஷமாய் நம்மை வரவேற்பார்கள். ஆண்டவரும் நம்மைப் பாராட்டுவார். (மத் 25 : 21, 34–36)

8. யெப்தாவின் மகள்

நியா 11:20–30

முக்கிய குறிப்புகள்

1. சில வேளைகளில் உலகப் பொருட்களை, லௌகீகத்தை, உலக மக்களை அதிகமாக நேசிப்போமானால், அநேகமாய் அவைகள் நம்மைக் கடவுளை விட்டுப் பிரிக்க ஏதுவாகிறது. கடவுளோடு ஒப்புரவாக அச்சமயம் உலகப் பொருட்களை விட்டு நாம் பிரிவது மகா கஷ்டமாக இருக்கிறது. ஆகையால் யாவையும் சரியான அளவோடே நேசிக்கவும் பாராட்டவும் வேண்டும்.

2. திரும்பப் பெறக் கூடாதவைகளிலொன்று, "சொன்ன சொல்". எதையும் ஆலோசித்து செய்யவேண்டும்.

3. கடினமானதாயினும் யெப்தாவின் மகள் தகப்பன் பொருத்தனைக்கு உட்பட்டாள். இதிலே தெய்வ பக்தியும், தகப்பனைக் கனம் பண்ணுவதையும் காண்கிறோம்.

4. அக்காலத்தைப் போல் இக்காலத்திலே கடவுள் நரபலியில் பிரியப்படவில்லை. இயேசு தாமே யாவருக்காகவும் ஜீவனைக் கொடுத்துப் பலியானார். நம்முடைய சரீரத்தையல்ல நம் ஆத்துமாவையே கொடுத்து ஜீவபலியாக நம்மைப் படைக்கக் கடவுள் விரும்புகிறார்.

5. இஸ்ரவேலின் குமாரத்திகள் யெப்தாவின் மகளுக்காக வருடாவருடம் துக்கம் கொண்டாடினார்கள். நம் மத்தியிலுள்ள கன்னிப் பெண்களின் நற்குண நடக்கைக்காக நாம் ஜெபிக்கலாம். குணப்படாத பெண்கள், அக்கிரமத்தினால் மரித்த ஸ்திரீகள் மற்றவர்களுக்கும் பெற்றவர்களுக்கும் இடறலாயிருக்கிறார்கள். அவர்களுக்காகவும் ஜெபிப்போமாக.

9. அன்னாள்

1 சாமு.1

முக்கிய குறிப்புகள்

1. நம் கவலைகளை மற்றோரிடம் சொல்வதைவிடக் கடவுளிடம் ஜெபித்துப் படைத்துவிடக் கற்றுக் கொள்வோமாக 1 பேது 5:7.

2. அன்னாளிடம் உண்மை, நன்றியறிதல், பொருத்தனையைச் சொன்னபடி நிறைவேற்றும் குணம் ஆகியவை இருந்தன.

3. நிறைவேற்றா பொருத்தனை

அ. கர்த்தரை ஏமாற்றுகிறதும்

ஆ. அவரைப் பரிகாசம் செய்கிறதும்

இ. அவரிடம் பொய்ப் பேரம் பேசுகிறதும்

ஈ. கர்த்தர் சொத்தைத் திருடுகிறதும்,

உ. நம்மை வேறெந்த நன்மைக்கும் அபாத்திரராயுமாக்குகிறது.

4. பெற்ற நன்மைக்கு ஸ்தோத்திரம் செலுத்த வேண்டும்.

அ. நம் பிள்ளைகளைச் சன்மார்க்க வழியில் வளர்க்கப் பிரயாசிக்க வேண்டும்.

ஆ. தனி ஜெபம், குடும்ப ஜெபம் மிகவும் அவசியம்.

இ. தேவன் கூப்பிட்டுப் பேசத்தக்க நிலமைக்கு நம் மக்களைக் கொண்டு வரப் பிரயாசிப்போமாக.

10. பத்துக் கன்னிகைகள்

மத் 25:1–13

முக்கிய குறிப்புகள்

1. மனுஷகுமாரனது வருகையில் எப்படிப்பட்டவர்கள் ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்? ஒருவர் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படுதல். 1. வயலில் வேலை செய்யும் இருவரில் ஒருவர் 2. இயந்திரம் அரைக்கிற இருவரில் ஒருவர் 3. கோதுமை மணிகளை நீக்கல். கடைசி நாளில் கைவிடப்படும்போது நம் மாயபக்தி வெளியாகும்.

2. தீவட்டிகள் – சபையின் பக்தியற்ற போதனை, ஒழுங்கு, ஆவியற்ற பழக்கங்கள் போன்றவை மறுபிறப்படையாத, குணப்படாத பேர்க் கிறிஸ்தவர்கள் எண்ணெயற்ற வெறும் தீவட்டிகள்.

3. எண்ணெய் – பரிசுத்த ஆவியானவரைக் குறிக்கும். பாத்திரங்கள் நம் இருதயம். ஆவியின் ஜீவியமுடையவரே ஏற்றுக் கொள்ளப்படுவார்கள்.

4. அடைக்கப்பட்ட கதவு – யார் உள்ளம் திறந்திருக்கிறதோ அங்கே கடவுள் வாசம் செய்வார் வெளி 3:20. மூடப்பட்ட பின்பு எத்தனை தரம் ஆவியைத் தாரும் என்று ஜெபித்தாலும் தட்டினாலும் திறக்கப்படமாட்டாது.

5. விழித்திருந்து, ஜெபித்து, ஆவியைப் பெற்றுப் பரலோகமடைவோமாக.

"தீபத்துக்கெண்ணெயைச் சீக்கிரம் ஊற்றும் திரியவியாமலே தீண்டியே ஏற்றும். பாவ அசுசங்கள் விலக்கியே மாற்றும் பரிசுத்த வரம் தந்தென் குறைகளைத் தீரும் – ஆவியை அருளுமே சுவாமி. (கீர்த்தனை 99)

11. சகேயு

லூ 19:1–10

முக்கிய குறிப்புகள்

ஆயக்காரன் – சுங்கச் சாவடியில் வரி வாங்குவோன். இவர்கள் அநியாயமாய்ப் பணம் பறிக்கும் வழக்கமுடையோராதலின் பரிசேயர், சதுசேயர் அனைவரும் இவர்களுக்கு விரோதிகள். சகேயு ஆயக்காரரின் தலைவர். ஐசுவரியவான், குள்ளன். கடவுளைப் பார்க்க ஆசைப்பட்டவன்.

1. "தேடுங்கள் அப்போது கண்டடைவீர்கள்" உண்மையான பிரயாசம் வீணாகாது. வகை தேடினான் – முன்னாக ஓடினான். காட்டத்தி மரத்தில் ஏறினான். இதற்குக் காரணம் விசுவாசமே.

2. இயேசுவையே நோக்கிக் கொண்டிருந்தான் – அவன் இலக்கு அவரே. தன் தொழிலோ மற்ற எந்தக் காரியமோ அவனுக்கு முன்வரவில்லை. ஆகையால் ஆபிரகாமின் குமாரன் என்றழைக்கப்பட்டான். பிலி. 3:12–14.

   "இலக்கை நோக்கித் தொடருகிறேன்". அப்போஸ்தலனின் அனுபவம். அவ்வாறு செய்ததாலேயே கடைசியில் தம் அறிக்கையை (2 தீமோ 4:7) அவர் செய்கிறார்.

3. விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான்.

   தன் சகல தப்பிதங்களையும், பாவச் செய்கைகளையும் அறிக்கையிட்டு, அவைகளைச் சரிப்படுத்தி ஆஸ்தியை மற்றோருக்குக் கொடுத்துப் பரம இராஜ்ஜியத்திற்குப் பாத்திரவாளியானான்.

4. பண ஆசை எல்லாப் பாவங்களுக்கும் வேராயிருக்கிறது. (1 தீமோ 6:10)

   எபி 13:5 லூக் 12:15 லூக் 18:24–25 காண்க.

12. தீமோத்தேயு

"நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு" (2தீமோ3:14)

முக்கிய குறிப்புகள்

1. தீமோத்தேயு சிறுவயதிலிருந்தே பக்தியில் பழக்கப்படுத்தப்பட்டவர். பக்தியுள்ள தாயாரும் பாட்டியும் சரியானபடி வேத அறிவை ஊட்டினார்கள். வாலிபனானபோது பக்த சிரோமணியான பவுல் அப்போஸ்தலன் முதல் பிரயாணத்திலேயே அவன் வீட்டாரை லீஸ்திராவில் கிறிஸ்தவர்களாக்கி அதுமுதல் அவர்களோடே எப்போதும் ஐக்கியப்பட்டிருந்தார். மிஷனெரிப் பிரயாணங்களில் அவர் வீட்டார் சந்தோஷமாய் அப்போஸ்தலனோடே அவரை அனுப்பினார்கள். அப்போஸ்தலன் அவரைச் சிறுவயது துவங்கியே சரியானபடி ஊழியத்திலே பழக்கினார். சிறைச்சாலையிலும் கூட தீமோத்தேயு இருந்ததைக் காண்கிறோம். இவ்வளவு பயிற்சி பெற்ற பின், எபேசு சபைகளுக்கு மேய்ப்பராக அவரை ஏற்படுத்தினார். முதலாவது விடுதலைக்குப் பின்னும் போய் இவரைச் சந்தித்ததை நாம் அறிவோம். கடைசியாகப் பவுல் மறுபடியும் சிறையிலிருக்கும்போது தீமோத்தேயுவைப் பற்றிய நல் அபிப்பிராயம் எவ்வளவாக அவருக்கு இருந்ததென்று அவர் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டு நிருபங்களில் காணலாம். இவ்வளவு பயிற்சிக்குப் பின்பே இந்த அருமையான கட்டளையைக் கொடுக்கிறார்.

2. கற்ற எவைகளில் நிலைக்க வேண்டும்?

2 தீமோ 2:1–7

எப்போதும் ஒரே சீராய் நிலைத்திருப்பதற்கு அன்றாட சத்துவம் தேவை. இல்லையேல் தவறி விழுவது எளிதாகும். ஏனெனில் சாத்தானானவன் கெர்ச்சிக்கிற சிங்கத்தைப் போல யாரை விழுங்கலாம் என்று காத்துக் கொண்டிருக்கிறான். ஆகையால் நாம் கைக்கொள்ள வேண்டிய கட்டளைகளை அப்போஸ்தலன்

தீமோத்தேயுவுக்குப் போதனையாக எழுதியுள்ளார். அவை நமக்கும் ஜீவியச் சட்டமாகின்றன.

1. நிலைத்திரு	1 தீமோ 4:15
2. போர்ச்சேவகனாய்த் தீங்கனுபவி	2 தீமோ 2:3
3. சேவகத்தில் ஏற்றவனாயிரு	2 தீமோ 2:4
4. சட்டத்தின்படி செய்	1 தீமோ 6:11–12
5. பிரயாசப்படு	1 தீமோ 4:7
6. ஜாக்கிரதையாயிரு	2 தீமோ 2:15

முடிவுரை

2 தீமோ 2:7 "கர்த்தர் எல்லாக் காரியங்களிலும் உனக்குப் புத்தியைத் தந்தருளுவார் – எப்போது? நான் சொல்லுகிறவைகளைச் சிந்தித்துக் கொண்டு செய்வாயாகில்..."

நாம் இதைச் சொல்லக்கூடுமா? 1 தீமோ 1:12 காண்க.

13. ஐந்து அப்பம் இரண்டு மீன் சிறுவன்

லூ 9:10–17 மா 6:32–43

முகவுரை – திருவிழாக் காலங்களில் ஊர்ப் பிரயாணம் வனபோஜனங்கள் போன்றவை இடம்பெறும்.

முக்கிய குறிப்புகள்

தாகமுண்டாக, தியாகம் உண்டாகும்.

பையன்

1. தன்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்தான் – விதவையும் தன்னிடமிருந்த எல்லாவற்றையும் கொடுத்தாள். இயேசு அவர்களைப் புகழ்ந்தார்.

2. அவன் யாரும் தூண்டாமல் உதாரத்துவமாய்த் தாராளமாய்க் கொடுத்தான். இயேசுவும் "வாங்குவதைப் பார்க்கிலும் கொடுப்பதே பாக்கியம்" என்றார்.

3. சிறியோரை அற்பமாக எண்ணலாகாது. சிறியோரைப் போல் ஆகாதவர்களுக்குப் பரலோகம் இல்லை.

4. அப்பையன் அவரைக் காணும்படி வந்தான். கொஞ்சம் பிரசன்னம் போதுமென்று வந்தான். கர்த்தரோ தன்னை அற்புதநாதராகக் காட்டினார்.

1. அனுதாபச் சிந்தையுடையவர் இயேசு.

2. மனிதருடைய சரீரத்திற்காக அதிக்கவலை எடுத்துக் கொள்வதனாலேயே உணவுக்காகக் கவலைப்பட வேண்டாம் என்கிறார். புல்லையும் பூவையும் உடுத்துவிக்கும் கடவுள் பறவையை ஆதரிக்கும் கடவுள் திட்டமாக மனிதனுக்காக அதிகக் கவலைப்படுகிறார்.

1. எப்போதும் ஜெபம் செய்தார்.

4. ஒழுங்கில் பிரியப்படுகிறார் – வரிசையாக உட்காரவைத்தார்.

5. நஷ்டம் அவருக்கிஷ்டமில்லை. 12 கூடைகள் நிறையச் சேர்த்தார்கள்.

6. சரீரப்பசி, ஆத்மபசி, சரீரதாகம், ஆத்ம தாகம் தீர்ப்பவர் அவரே.

கடவுளுடைய வீட்டுக்கு அளிக்கவேண்டிய ஈவுகள்

தாராளமாயும் மனரம்மியமாயும் கொடுக்கவும். நாம் கொடுக்கும் ஈவுகளை அதிகமாகக் கொடுக்கவும் கற்பிக்கவும் வேண்டும். 2 கொரி 9:7 காண்க.

1. இஸ்ரவேலர் ஆசரிப்புக் கூடாரம் கட்ட வேண்டியதற்கு அவசியமான ஈவுகளைக் கொடுக்கக் கட்டளைப் பெற்றனர்.
2. தாராள மனமுடையோர் எல்லாரும் கொடுத்தார்கள்.
3. பொருள்களைக் கொடுத்தார்கள்.
4. இரண்டு சிற்பாசாரிகள் ஏற்படுத்தப்பட்டனர்.

முடிவுரை

தேவையானதற்கு அதிகமான பொருள்களைக் கொடுத்தார்கள். நாம் கொடுக்க வேண்டிய அளவு கொடுக்கிறோமா? இப்படிப் பொருட்கள் வழங்கப்பட்டதால் கடவுளுடைய வீடு ஆர்ப்பரிப்புடனே கட்டப்பட்டது.

14. வலிப்பு வந்த பையன்

மாற்கு 9:14–27

முகவுரை :

குடும்பங்களிலுள்ள பலவித வியாதிகள். வைத்திய சிகிச்சையால் சீக்கிரம் குணமாகும் வியாதிகள். தீரா வியாதிகள் பல பெயர் பெற்ற வைத்தியரிடஞ் செல்ல, குணமாகும். அசுத்த ஆவிபிடித்தல் ஏற்படும்போது செலவோடு அதைத் துரத்தல் வேண்டும். பெற்றோரின் மனச்சோர்வும் வேதனையும் அதிகரிக்கும். இப்பேர்ப்பட்ட சமயங்களில் மக்கள் காண வருவார்கள். அங்கு அற்புதம் நடைபெறும். இதை நாம் அறிவோம்.

1. இப்பையனின் வியாதியின் கொடுமையை நாம் அதிகமாய் அறியவேண்டும்.

2. தகப்பனின் விசாரத்தையும், விசுவாசத்தையும் அதிகமாக ஊன்றிப் பார்க்க வேண்டும்.

முக்கிய குறிப்புக்கள்

1. வைத்தியனின் பணபேரம், ஆண்டவர் அருளும் விசுவாசத்தின் மேன்மை. “விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்”

2. விசுவாசமே முக்கியம். விசுவாசமில்லாமற் போனால் நாம் எடுத்துக் கொள்ளும் பிரயாசங்கள் யாவும் வீணாகும்.

மேலும்,

அ. கடவுளை விசுவாசியாமற் போனால் மார்க்கமில்லை.

ஆ. குடும்ப விசுவாசமில்லையேல் அன்பு அரவணைப்பு கிடையா.

இ. வைத்தியன் மேல் விசுவாசமில்லையேல் – வியாதி அதிகரிப்பும் மரணமுமே நேரிடும்.

3. விசுவாசம் குறையுமிடத்தில் சந்தேகம் அதிகரிக்கும். சந்தேகப் பாவம் பெரிய பாவம். இது மனசந்தோஷத்தையும் சமாதானத்தையும் குலைத்துவிடும். இதையறிந்த தகப்பன் அவிசுவாசத்தை நீக்கக் கூடியவர் இயேசு என்பதை உணர்ந்து "என் அவிசுவாசம் நீங்க எனக்கு உதவி செய்யும்" என்று கேட்டுக் கொண்டான்.

4. நம்முடைய அவிசுவாசம் கடவுளை விட்டு நம்மை நீக்கும். அந்தக் கஷ்ட காலங்களில் சாத்தான் விசுவாசம் தளர அதிகமாக ஏவுவான்.

"விசுவாசித்தவளே பாக்கியவதி"

வியாதி – மரணம், வறுமை, துக்கம், துன்பம், மனச்சோர்வு ஏற்படும்போது விசுவாசத்தில் உறுதியாய் நிற்பவர்கள் பாக்கியவான்கள்.

5. விசுவாசமே இரட்சிப்பு

"தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவனெவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படி அவரைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்" (யோவான் 3:16)

"மலையாமல் இயேசுவிடம் தொலையாத கவலை சொல்லி உலையா நம்பிக்கை வைத்து நிலையான ரட்சை பெற பாவி இன்றே திரும்பாயோ – நேச ஆவியின் சத்தம் கேளாயோ?" (கீர்த்தனை 130)

15. பலவகையான சீடர்கள்

யோவா 6:60–71 மா 4:1–20

முக்கிய குறிப்புகள்

கர்த்தரைப் பின்பற்றுதல் கடினமான பாதையில் செல்லுதலாகும்.

தம்மைப் பின்பற்றுவோரின் கூட்டம் விரிந்து பெருகி, பலன் தரவேண்டுமென்ற கரிசனை கிறிஸ்துவுக்கு இருந்தது. ஆனால் அவர் அதற்காகத் தம் கொள்கைகளின் கடினத்தைத் தளர்த்தவில்லை. சத்தியத்தை மாற்றியமைக்கவில்லை என்று அறிகிறோம்.

1. இடுக்கமான வழியாய்ப் பிரவேசியுங்கள் லூ 13:24.
2. மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் தேவதூதர் முன்பாக மறுதலிக்கப்படுவான் லூ 12:9.
3. ஒருவன் என் பின்னே வரவிரும்பினால் அவன் தன்னைத்தான் வெறுத்து, தன் சிலுவையை அனுதினமும் எடுத்துக் கொண்டு என்னைப் பின்பற்றக்கடவன் லூ 9:24.
4. ஒரு கன்னத்தில் அறைந்தால் மறுகன்னத்தைக் கொடு.
5. அங்கியைக் கேட்டால் மேல் வஸ்திரத்தையும் கொடு.
6. ஒரு மைல் வரக்கேட்டால் இரு மைல் போ.
7. சத்துருவைச் சிநேகி. சபியாதே, போஜனங்கொடு, பானங்கொடு.
8. உன்னைப் போலப் பிறனையும் நேசி.

இவை யாவும் எளிதில் முடியுமா? கடினமான உபதேசம். யார் இதைக் கேட்பார்கள் என்றார்கள் யோ 6:60.

சீஷருக்குள் பலவித மனப்பான்மை ஏற்பட்டது.

பலவகை சீஷர்கள் : பின் சென்றோரை ஆண்டவர் அறிவார்.

1. இடறியவர்கள் 61–63 – வேளாவேளைகளில் இடறல் ஏற்படும். நாமும் இடறுகிறோம்.

   நம்முடைய இடறல்கள் எவை?

   பணக்கஷ்டமோ? சரீரக் கஷ்டமோ?

   கண்களின் இச்சையோ?

   மாம்சத்தின் இச்சையோ?

   ஜீவனத்தின் பெருமையோ?

   வேறு ஏதேனுமா? 1 யோ 2:15–17

2. **விசுவாசியாதவர்கள் 6:64–65**

   சோதனைகள் – மனச்சோர்வு – அவிசுவாசம், அவநம்பிக்கை

   பக்திக்குறைவு – குறைவான தேவ அறிவு.

   குறைவான வேத அறிவு. குறைவான பக்தர் சவகாசம்

   கடவுளை விட்டே பிரித்துவிடும்.

   சாத்தான் யாரை விழுங்கலாமோ என்று கெர்ச்சிக்கிற சிங்கம்போல் காத்திருக்கிறான்.

   "எங்கள் விசுவாசத்தை வர்த்திக்கச் செய்யும்" என்று சீஷர் இயேசுவை வேண்டிக் கொண்டார்கள்.

   ஆண்டவரின் திட்டவட்டமான போதனை.

   விசுவாசம் குறையாமல் வளர்ச்சியடையப் பிரயாசப் படவேண்டும். விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம்.

3. பின்வாங்கிப் போனவர்கள் 6:66. வழியருகே, பாறைமேல், முள்ளில் – விழுந்த விதைபோல்!

உலகத்திற்கும் உலகப் பொருளுக்கும் கட்டுபட்டு உலக சிநேகிதர் மயக்கம் – உலக உல்லாசம் தீய போதனை தோல்வி (ஜீவியத்தில் பலவிதத் தோல்வி) ஏமாற்றம் யாவும் பின்வாங்க வைக்கும். ஆண்டவர் போதனை கலப்பை .... தகுதியுள்ளவனல்ல லூ 9:62.

பவுல் கூறுவது; பிலி 3:12–14.

4. பக்தியுடன் பின்சென்றவர்கள் 6:67–69.

ஆண்டவரின் கேள்வி : "நீங்களும் போய்விட மனதாயிருக்கிறீர்களா?"

சீடர் பதில் – "யாரிடத்தில் போவோம்?" 68–69.

அவர்கள் பின்சென்றதாலேயே ஆதித் திருச்சபை ஏற்பட்டு இன்றுவரை நிலைக்கிறது. நம் பதில் என்ன? தற்காலச் சூழ்நிலையில் – பல ஏமாற்றங்கள் ஏற்படும்போது நம் பதில்.

5. துரோகியான சீஷன் (6:70–71) துரோகி யார்? பின் செல்வேன் என்பவரே – நம் சாட்சி எப்படி? நாம் எவ்வாறு பின் செல்கிறோம்?

யூதாஸ் பெரும் பாதகன்தான். ஆனால் நாம் எப்படிப் பின் செல்லுகிறோம்?

முடிவுரை

இரட்சிப்புக்கு ஒரே வழி இரட்சகரைப் பின்செல்லுதலே!

பக்தியுடன் பின் சென்றோர் இரட்சிக்கப்பட்டார்கள்.

1. குறுக்கு வழிகள் பிரயோஜனமில்லை. குறுக்குவழியில் கள்ளனும் கொள்ளைக்காரனுமே செல்வார்கள்.

2. கிறிஸ்துவையன்றி வேறு மார்க்கமில்லை. இது விசாலமான வழி. கேட்டின் வழி அல்ல.

அவரே மெய்யான வழி – ஜீவன் – சத்தியம்.

வாசல், தலை

அப்பம், மூலைக்கல்

சத்தியம், அஸ்திபாரம் 1 கொரி 3:1

மேய்ப்பன், பிளவுண்ட மலை

செடி, அவரே எல்லாம்!

"என் ஆண்டவா! என் ஜீவனே!
என் மார்க்கமே! முடிவே" என்று பக்தன் பாடுகிறார்.

லூக்கா 9:23–25 காண்க.

"விண்கிரீடம் பெறப் போருக்கு" (பாமாலைப் பாட்டல்)

"விசுவாசியின் காதில்பட" (கீர்த்தனைப் பாடல்)

மாற்கு 4:1–20 காண்க.

அவரையே பின்பற்றுவோமாக.

"விண் கிரீடம் பெறப்போருக்கு
கிறிஸ்தேசு செல்கின்றார்
அவரின் வெற்றிக் கொடிக்கு
பின்னாகச் செல்வோன் யார்?
தன் துக்கப் பாத்ரம் குடித்துச்
சோராமல் நிற்போன் யார்?
தன் சிலுவையை எடுத்து
அவர் பின் செல்வோன் யார்?" (பாமாலை 385)

16. நான்கு தொழுநோயாளிகள்

2 ராஜா 7:1–11 தியான வாக்கியம் 9.

முக்கிய குறிப்புகள்

சீரியரால் சமாரியா முற்றுகை... பயங்கர பட்டினி. அலங்கத்தின் மேல் ராஜா உலாவினபோது ஒரு ஸ்திரீயின் வேண்டலைக் கேட்கிறார். இந்நிலையில் நான்கு தொழுநோயர் ஒலிமுக வாசலில் விழுந்தனர்.

நமக்குப் பட்டணத்திலும் சாவு – பட்டினி பஞ்சம்

இங்கிருந்தாலும் சாவு – பட்டினி – பஞ்சம்

சீரிய ராணுவத்திடம் போவோம் என்கிறார்கள். மனதளர்ச்சி, சோர்வு ஏற்படுகிறது.

இந்நிலையில் அவர்களுக்கு ஒரு நற்செய்தி காத்திருக்கின்றது. முற்றுகையை முறித்து சீரிய ராணுவம் ஓடிப் போயிற்று. தோல்வி கண்டது. நமக்கு வரும் நற்செய்தி இயேசுவின் சுவிசேஷம். அது இரட்சிப்பின் நற்செய்தி. (லூக்கா 2:11)

1. இது நற்செய்தியை நாம் அறிவிக்க வேண்டிய நாள் என்றார்கள். ஏன்?

1. முற்றுகை நீங்கிற்று. 2. பட்டினிக்குப் பரிகாரம் கிட்டிற்று. 3. யாவருக்கும் விடுதலை 4. பஞ்சம் நீங்கிற்று 5. உயிர் பிழைத்தார்கள். 6.நன்றாய்ப் புசித்து, குடித்து, வெள்ளி, பொன், வஸ்திரம் யாவும் எடுத்துக் கொண்டார்கள். 7. தேவையைப் பூர்த்தியாகப் பெற்றுக் கொண்டார்கள்.

2. திருப்தி அடைந்ததும் ஒரு தீர்மானம் செய்தார்கள். அது என்ன?

“இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்” நாம் அதைச் செய்ய வேண்டும் என்று செயற்பட ஆரம்பித்தார்கள்.

I. நாம் நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

1. பிசாசின் முற்றுகை நீங்கிப் போகும்போது

2. ஆத்ம பசி தாகத்தின் பரிகாரம் கிடைக்கும்போது

3. தேவைகளை எல்லாம் தாராளமாய் அனுபவிக்கக் கூடிய இடம் கண்டுபிடித்த பின் நாமும் அறிவிக்க வேண்டும். திருப்தி அடைந்தவர்களாய், தீர்மானம் செய்தவர்களாய் அறிவிக்க வேண்டும்.

   நாம் தேடுமுன் அவர் நம்மைத் தேடி வந்தார்.

   நாம் கேட்கும் முன் அவரே பெரிய அழைப்பைக் கொடுக்கிறார் ஏசா 55:1–2, 6–9.

II. கர்த்தரைத் தேடினால் :

1. தேவையைப் போக்கும் திருப்தி ஏற்படும்.

2. பாவ மன்னிப்பு கிடைக்கும்.

3. கடவுளின் ஒழுங்கே நிறைவேறும். நம்மை அதன்படி நடத்துவார்.

4. சந்தோஷ ஜீவியம்

5. மற்றோறோடு இரட்சிப்பை அனுபவித்தல் ஏற்படும்.

   ஆண்டவரை நெருங்க நெருங்க, அவரைப் பற்றிய அறிவு மிகுதியாகும். அவரை அனுபவிக்க அனுபவிக்க மேலும் மேலும் வாஞ்சிப்போம். "வேத அறிவு மிஷனெரி வாஞ்சையை எழுப்பிவிடும்"

   நம் தீர்மானங்களை ஆராய்ந்து பார்ப்போம்.

நம் தீர்மானங்கள் நற்செய்தி அறிவிப்பை ஒட்டியவையா?

III. காலம் தாழ்த்தினால் குற்றம் சுமரும்.

இதை அவர்கள் உணர்ந்தார்கள். ஒருவனும் வேலை செய்யக்கூடாத ராக்காலம் வரும். (யோ9:4) (காற்றுள்ள போதே தூற்றிக்கொள்) "வாழ் நாளெல்லாம் வீண் நாளாகப் போயிற்றே ஐயோ"

2. காலம் தாழ்த்தல் உற்சாகத்தைக் குறைக்கும். ஆதலால் ஆத்துமாக்கள் பேரில் வாஞ்சை வேண்டும். உடனே நற்செய்தியை அறிவிக்க வேண்டும்.

3. இருதய நிறைவினால் வாய் பேசும்.

சங்கீதக்காரன் சொல்வது : சங் 51:10–13 "தேவனே .... திரும்புவார்கள்".

ஏசாயா தீர்க்கன் சொல்வது : ஏசா 52:7 "சமாதானத்தைக் கூறி நற்செய்தியை அறிவிப்பவர்களின் பாதங்கள் எவ்வளவு அழகாக இருக்கின்றன". பவுல் சொல்வது : "சுவிசேஷத்தைப் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ!". 1 கொரி 9:16.

அறிவியாதிருந்தால் நம் மேலும் குற்றம் சுமரும். இது நம்மேல் விழுந்த கடமை. ஏன்?

நாம் அதிக சிலாக்கியங்களையும் சௌகரியங்களையும் பெற்றிருக்கிறோம்.

1. பக்தர் மூலம் 2. ஆவிக்குரிய கூட்டங்கள் மூலம்
3. பிரசங்கங்கள் மூலம் 4. கைப்பிரதிகள் 5.புஸ்தகங் கள் 6. சத்திய வேத தியானம் 7. பரவசப் பாடல் 8. வேதபாட வகுப்புகள் ஆகியவை மூலம் நாம் ஏராளமான அறிவை அனுபவிக்கிறோம்.

காலத்தையும் நேரத்தையும் கூடக் கொடுத்திருக்கிறார் ஆண்டவர்.

IV. அறிவிப்பது நம் கடமை. கடமை தவறினால் தீர்ப்பும், தண்டனையும் உண்டு.

அதிகம் பெற்றவர்களிடம் அதிகம் எதிர்பார்க்கப்படும்.

திராட்சத் தோட்ட அத்தி மரம் – தண்டனை. "வெட்டிப் போடு"

தாலந்து, உபயோகிக்கப்படாவிட்டால், "இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் பிடுங்கப்படும்".

"புறப்படுங்கள் தேவப் புதல்வரின் ஊழியரே, கறைபடா இயேசு நாமம் துதித்து மகிமை பெற பிறப்பினிலே உங்களை விரித்த தயை நினைத்து"

சுவிசேஷகர் டி.எல். மூடி "Are You Saved" என்று ஒருவரைக் கேட்டபோது அவர் "Mind your business" என்றார். உடனே மூடி அவனைப் பார்த்து, "Brother this is my business" என்று கூறினார். நம்முடைய சுவிசேஷப் பணியைச் செய்ய நாம் ஆண்டவரிடமிருந்து கட்டளை பெற்றிருக்கிறோம்.

V. அறிவித்தார்கள்! நாமும் அறிவிப்போம்! நாம் சாட்சிகள்.

அறிவிப்பதற்கு ஏராள ஆயத்தம் வேண்டும். ஏன்? பரம பொக்கிஷமான சுவிசேஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம். நம் தகுதியை முதலில் உணர்ந்து கொள்வோம்.

1. ஏசா 6:6–8 ஒப்புக் கொடுத்தல்
2. தாவீது சங். 51:12–13 பாவத்தினின்று இரட்சிப்பு
3. பேதுரு, அப். 2 பரிசுத்தாவியால் நிரப்பப்பட்ட பின்பே ஊழியம்
4. ஏராளமான கடவுளுடைய பிள்ளைகள் பரிசுத்த ஆவி பெற்றே அவருடைய கிருபையாலே உழைத்தார்கள், உழைக்கிறார்கள்.
5. உபா 32:1–12 கழுகும் குஞ்சுகளும் இதற்கு உதாரணம். கடவுள் நம்மை நிர்விசாரத்திற்கும், சோம்பலுக்கும் இடம் கொடுத்து, வீணே காலம் கழிக்க நம்மை இரட்சிக்காமல், பெரிய உயர்ந்த காரியங்களை அவருக்கும் உடன் சகோதர சகோதரர்களுக்கும் புரியவே நம்மை இரட்சித்திருக்கிறார்.

VI. அவர் பாதத்தில் நம்மை ஊற்றி, சுத்தாங்கமாக்கி ஆவியைப் பெற்று, அவரை அறிவிக்க அருள்புரிவாராக.

தேவனே பிரசன்னமாகி
ஜீவன் ஊதி உயிர்ப்பியும்
ஆசை காட்டும் தாசர் பேரில்
அன்பாய் ஆவி ஊற்றிடும்
அருள்மாரி எங்குமாக
வருவிக்கப் பண்ணுமேன்
ஆவலோடு நிற்கிறோமே
ஆசீர்வாதம் ஈயுமேன் (பாமாலை 367)

"ஆத்தும ஆதாயம் செய்குவோமே" கீர்த்தனை 269

"தாசரே இத்தாரணியை அன்பாய்" கீர்த்தனை 267.

"The young eagles have a comfortable rest. The mother take good care of them & carries food to them. They grow. But one day she comes with no food; instead she stirs up the nest, pulls the young eagles out & drops them in space. Why does the mother eagle do this? Is she being cruel? not at all. She does this for them and bears them on her wings so that they suffer no hurt. Mother eagle is teaching the young ones why they were born not to be coddled in a soft nest. They were born do soar and to fly high."

17. மூன்று ஞானிகள்

முக்கிய குறிப்புகள்

மரியாளின் சிந்தனை

சில முக்கிய நிகழ்ச்சிகளை மரியம்மாள் எப்போதும் சிந்தித்தார்கள். தூதர் அறிவிப்பு – மேய்ப்பர் சந்திப்பு யாவும் அவர்கள் சிந்தனையில் தங்கின.

எட்டாம் நாள் – யூதச் சடங்காச்சாரம் 1. விருத்த சேதனம் 2. பெயர் சூட்டல். இயேசு மக்களைப் பாவத்தினின்று ரட்சிக்கிறவர்.

நாற்பதாம் நாள் – மோசேயின் நியாயப் பிரமாணப்படி யூதச் சடங்கு – அது சுத்திகரிப்பின் நாள்.

மோசேயின் நியாயப் பிரமாணம் சொன்னதாவது : "முதற்பேறான எந்த ஆண்பிள்ளையும் கர்த்தருக்குப் பரிசுத்தமானது"

எருசலேம் சென்றார்கள் :

1. மரியாள் சுத்திகரிக்கப்படவும்
2. பாலனைக் கடவுளுக்கு ஒப்புக் கொடுக்கவும்
3. பலி செலுத்தவும் (இரண்டு காட்டுப்புறா அல்லது இரண்டு புறா குஞ்சு)

எருசலேம் செல்லுதல் கடவுளை வணங்க, தரிசிக்கச் செல்லுதல் ஆகும். ஏன் போகவேண்டும்?

1. பாவங்களை அறிக்கையிட்டு, மன்னிப்படைந்து சுத்திகரிக்கப்பட.
2. கடவுள் கொடுத்த சகல சிலாக்கியங்களையும், தாலந்துகளையும் அவருக்கே ஒப்புக்கொடுக்க.

3. நாமும், கடவுள் அளித்ததிலிருந்து நேர்மையான பாகத்தை ஸ்தோத்திரக் காணிக்கையாகச் செலுத்தவும் செல்ல வேண்டும்.

சிமியோன் : நீதியும், தேவ பக்தியும் உள்ளவர். "இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருந்தார்" இயேசுவைக் கண்டபின் தன்னைச் சமாதானத்தோடே போகவிடக் கடவுளைப் பிரார்த்தித்தார். இதுவே அவரது ஜீவிய நோக்கமாக இருந்தது. நம் ஜீவிய நோக்கமென்ன? அதை நிறைவேற்றப் பிரயாசைப்படுகிறோமா? – சிமியோன் பாட்டு. லூக் 2:29–32

அன்னாள் : ஒரு தீர்க்கதரிசி. கன்னிப் பிராயத்தில் விவாகமாகி ஏழு வருஷம் புருஷனோடிருந்து, பின் விதவையானவள். எண்பத்து நான்கு வயதுள்ளவள். உபவாசம், ஜெபம், ஆராதனை செய்துகொண்டு தேவாலயத்தை விட்டு நீங்காதிருந்தாள்.

1. வயது சென்ற சகோதரிகளுக்கு நல்ல மாதிரி. வீடு வீடாய்ச் சென்று மற்றோரை குறை கூறுதல் தவறு. 1 தீமோ 2 காண்க.

2. விதவைகளுக்கு ஆறுதலான ஜீவியம், தேவனோடே தரித்திருத்தலும் மற்றோருக்குபதேசித்தலுமே.

இக்காரியங்கள் எருசலேமில் நடந்து கொண்டிருந்தபோது – கிழக்கிலே வானசாஸ்திரிகள் அவருடைய நட்சத்திரத்தைக் கண்டார்கள்.

1. அறிவில் குறைந்த மேய்ப்பருக்குத் தூதனே யாவற்றையும் விளக்கி அறிவித்துச் சரியான அடையாளங்களையும் கூறினார்.

2. பக்தர்களான சிமியோனுக்கும், அன்னாளுக்கும் பரிசுத்த ஆவியின் ஏவுதலாலே தெரிவித்தார்.

3. மிகுந்த அறிவாளிகளான சாஸ்திரிகளுக்கு நட்சத்திரத்தின் மூலம் தெரிவித்து வழி நடத்தினார். ஆகையால் –

1. கடவுள் பார்வையில் கற்றோர், கல்லாதோர், ஏழைகள், ஐசுவரியவான்கள் யாவரும் சமமே. நம்மையும் சமமாகவே நடத்துகிறார். (பாவிகளுக்குள் பெரிய பாவி, சிறிய பாவி, கொஞ்சக்காலப் பாவி என்ற வித்தியாசமே இல்லை. யாவரும் பாவிகளே).

2. அவரவர் திறமைக்கேற்றவாறு நடத்துகிறார். "நமது உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூறுகிறார்" (சங். 103:14)

3. பணிந்து கொள்ளும் இருதயத்தைக் கவனிக்கிறாரேயன்றி அவர் அந்தஸ்த்தைக் கவனிக்கிறவரல்ல. அவருக்கு "யூதனென்றும்........ ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலா. 3:28)

சாஸ்திரிகள் எருசலேம் வருதல்

நட்சத்திரம் வழி நடத்தல் – ஏரோதைச் சந்தித்தல் – ஏரோதுக்கும் எருசலேம் நகரத்தாரனைவருக்கும் கலக்கம் – பிரதான ஆசாரியர் வேதபாரகர் தீர்க்கதரிசனம் கண்டுபிடித்தல்.

"எப்பிராத்தா ...." (மீகா. 5:2)

சாஸ்திரிகளுக்கு வஞ்சகமான யோசனை.

பிள்ளையைக் கண்டு நமஸ்கரித்துச் சமர்ப்பித்தவை :

1. பொன் – ராஜ மேன்மை. நாம் செலுத்தும் பொன் கீழ்ப்படிதல். பிரஜைகளது கடமை "பலியைப் பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம்"

2. தூபவர்க்கம் – ஆசாரியருடையது. ஆசாரியர்

கடவுளுக்கும் மனிதனுக்கும் மத்தியஸ்தர். வானுக்கும் பூமிக்கும் இயேசுவே மத்தியஸ்தர். இந்த இணைப்பை உண்டு பண்ணவே இரு உலகுக்கும் மத்தியில் குருசில் தொங்கினார். இன்று நாம் அவருக்குச் செலுத்தும் காணிக்கை வணக்கம். பரமவாசல் திறந்தோரை வணங்குவோமாக.

1. விண்ணில் பிரதானியான நீர் பகைஞர்க்காகவே மண்ணில் இறங்கி மரித்தீர். நீர் வாழ்க இயேசுவே. (பாமாலை 261)

2. பரம வாசல் திறந்தீர் நீர் வாழ்க இயேசுவே!

3. வெள்ளைப் போளம் : மரித்தோர்க்கு நன்கொடை. இயேசுவும் நம்மேல் வைத்த அன்பினாலே மரித்து தம்முயிரை நம்மை ரட்சிக்கக் கொடுத்தார். இன்று நாம் செலுத்தும் காணிக்கை நம் அன்பே.

"சராசரங்கள் அனைத்தும்
அவ்வன்புக்கு எம்மாத்திரம்?
என் ஜீவன் சுகம், செல்வமும்
என் நேசருக்குப் பாத்தியம்"

"மாந்தர்க்கு மீட்பைக் கஸ்தியால்
சம்பாதித்தீந்த இயேசுவே
உமக்கு என்றும் தாசரால்
மா ஸ்தோத்திரம் உண்டாகவே". (பாமாலை 103)

இன்று நாம் நம் கீழ்ப்படிதலையும் வணக்கத்தையும் நம் அன்பையும் அவருக்குச் செலுத்துவோமாக.

இவை யாவும் இயேசு பிறந்த இரண்டாம் வருஷம் நடந்தன.

தேவ எச்சரிப்பால் சாஸ்திரிகள் வேறு வழி சென்றனர்.

யோசேப்பின் இரண்டாம் சொப்பனம் –

எகிப்து சென்றனர்.

ஏரோதின் தீய எண்ணங்களும், வீண் குரூர பிரயாசைகளும் அபத்தமாயின.

1. கடவுளது சித்தத்திற்கும் தீர்மானத்திற்கும் விரோதமானவை ஓர்க்காலும் ஓங்காது. ஆகையால் நம்மை அவரது பலத்த சித்தத்திற்கு ஒப்புக் கொடுப்போம்.

2. மோசே ஆண் பிள்ளை சங்காரத்தில் காக்கப்பட்டு, பெரிய தலைவராய் இஸ்ரவேலரை கானானுக்குள் வழி நடத்தினார். இயேசு – ஏரோதின் சங்காரத்திற்கு காக்கப்பட்டு உலக ரட்சிப்பையுண்டாக்கிப் பரத்துக்கு வழி நடத்துகிறார்.

3. நம்மையும் கடவுள் தம் தீர்மானத்தின்படியே சகல விபத்திற்கும் காப்பாற்றி வருகிறார். நம்முடைய உத்திரவாதத்தை உண்மையோடும், உற்சாகத்தோடும், நேர்மையாயும் செய்வோமாக.

யோசேப்பின் மூன்றாம் சொப்பனம் :

ஏரோது மரணமடைந்ததும், பரிசுத்தக் குடும்பம் கடவுளால் நாசரேத்துக்கனுப்பப்பட்டது.

இந்த யோசேப்பும், பழைய ஏற்பாட்டு யோசேப்பைப் போல ஓர் சொப்பனக்காரரே.

18. சகரியாவும் எலிசபெத்தும்

(லூக்கா 1:39–56)

முக்கிய குறிப்புகள்

இருவரும் தெய்வ கட்டளையையும் நியமங்களையும் கைக் கொண்டவர்கள். குற்றமற்றோராய் நடந்தார்கள். நீதியுள்ளோர், வயோதிபர், ஆசாரியர்கள் தங்கள் தேவையையும் குறைவையும் கடவுளுக்கு தெரியப்படுத்தினவர்கள். இவர்களே பிள்ளையில்லாதவர்கள்.

பின்னை ஏன் கடவுள் பிள்ளை கொடுக்கவில்லை?

அநேக சந்தர்ப்பங்களில் நாம் இப்படியே கடவுளைக் கேள்வி கேட்கிறவர்களாக இருக்கிறோம். இது நம் வேலையல்ல. நாம் அவருடையவர்கள். அவர் சித்தப்படியே செய்வார். ஆனால் சகலத்தையும் நன்மைக்கேதுவாகவே செய்வார் (ரோமர் 8:28) லூக்கா 9:57–62ஐப் படிப்போமானால் நாம் என்ன சொல்லுவோம்? கடவுளோடு வாதாட நாம் உண்டாக்கப்படவில்லை. அவர் சித்தத்திற்கடங்க வேண்டியவர்கள் நாம்.

கிடைக்குமட்டும் காத்திருக்க வேண்டும்.

குறைவு நிறைவாக்கப்படும் காலம் வரை, பொறுமையோடு, அவர் சித்தத்திற்கு நம்மை ஒப்புவித்துக் காத்திருப்போமாக.

உதாரணமாக :

1. அன்னாள் – சாமுவேலுக்காக
2. மோசே – கானானுக்காக
3. சகரியா – யோவானுக்காகக் காத்திருந்தனர்.

1. சகரியாவின் வாய் கட்டப்பட்டது.

தேவ வல்லமையை நம்பாமல் சந்தேகித்ததே சகரியாவின் பாவம். அவிசுவாசம் பெரிய பாவம். நாம் ஜெபிக்கும் போதே இருதயத்தில் சந்தேகிப்பதினால் அநேக நன்மைகளைப் பெற்றும் சாட்சி சொல்ல வாயில்லாமல் ஊமைகளாயிருக்கிறோம். ஆனால் தன் மனைவி கர்ப்பவதியானதைக் கண்டதும் சகரியா வெட்கப்பட்டு, துக்கப்பட்டு, அவிசுவாசத்தை அறிக்கையிட்டு மன்னிப்பு பெற்றிருப்பார்.

இச்செய்தி பரவியதைப் போல அவனது ஸ்தோத்திரப்பாட்டால் அவன் வாய் திறக்கப்பட்ட செய்தியும் பரவியது. நாம் எப்போதெல்லாம் ஸ்தோத்திரப்பாடல்கள் பாடுகிறோம்? பிலி. 4:6

2. விசுவாசித்தவளே பாக்கியவதி

இப்படி எலிசபெத்து மரியாளை வாழ்த்தினாள். எலிசபெத்து மரியாளின் இளமையையும், நிலமையையும் பாராமல், ஆசாரியனான தன் புருஷனை விட மரியாளின் விசுவாசம் அதிகமென்று ஒப்புக் கொண்டதால் இப்படி வாழ்த்தினாள்.

"விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்"
"கிரியையில்லாத விசுவாசம் செத்ததாயிருக்கும்"
"கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் ரட்சிக்கப்படுவீர்கள்"

நாம் கற்றுக்கொள்ளும் பாடங்கள்

1. ஆசாரியனும் மனைவியும் பரிசுத்தமும், குற்றமற்றவர்களாயுமிருந்தார்கள். இது தேவ ஊழியருக்கு முன் மாதிரி. ஊழியரும் மனைவியரும் இப்படி இருந்தால்தான் ஊழியம் சரிவர நடந்தேறும். குணப்படாத

ஊழியர் சபைக்குச் சாபம். லௌகீக சிந்தையுள்ள மனைவியர் ஊழியருக்கு இடறல். ஊழியர்கள் ஒரே ஆவியால் நடத்தப்பட வேண்டும். அதற்காக ஜெபிப்போமாக.

2. இரு ஸ்திரீகள் சந்தித்தால் – சம்பாஷணை என்ன?

உலகப் பேச்சா, நகை, துணி, மற்றோர், சாப்பாடு, சண்டை அல்லது ஆவிக்குரிய பேச்சா? எப்படி நேரம் கழிகிறது?

1. வேதம் வாசிப்பதுண்டா?

2. கடவுளிடம் பெற்ற நன்மைகளைச் சொல்லிக் கொள்வதுண்டா?

3. மற்றோருக்காக ஜெபிப்பதுண்டா?

ஆவியினால் நிறைந்து அவரை விவரித்துத் துதித்து ஜெபிப்போமாக.

இரண்டு ஸ்திரீகளின் ஜெபத்தினாலேயே லண்டன் மிஷன் ஸ்தாபிக்கப்பட்டது. இன்னும் சகோதரிகளின் ஜெபமே சபையை அசைக்க வேண்டும்.

4. சகுனம், சாஸ்திரம் பார்த்தல் தவறு.

ஒரே இனத்தாரான இரு கர்ப்ப ஸ்திரீகள் சந்திக்கமாட்டார்கள். மரியாளும் எலிசபெத்துமோ சந்தித்துக் கொண்டார்கள். அது நல்ல பயனுள்ள சந்திப்பாயிற்று. மூட வழக்கங்களையும் சகுணங்களையும் நாம் தவிர்க்க வேண்டும்.

19. மகதலேனா மரியாள்

லூக்கா 8:1–3

முக்கிய குறிப்புகள்

"இயேசு நன்மை செய்கிறவராய்ச் சுற்றித் திரிந்தார்". பலவித நன்மைகள், அசுத்த ஆவி நீக்கி, பிணி தீர்த்து, அங்கவீனம் நீக்கி, போதித்து, பாவங்களை மன்னித்துப் பாவிகளைக் குணமாக்கினார். இப்படிக் குணமாக்கப்பட்டவர்களில் ஒரு பெண் மகதலேனா மரியாள்.

மகதலேனா மரியாள்

மகதலா ஊரைச் சேர்ந்தவள். இவளிடமிருந்து ஏழு பிசாசுகள் துரத்தப்பட்டன. தான் பெற்ற நன்மைக்குப் பிரதிபலன் அவள் காட்டின நன்றி : அவருக்குத் தன் ஜீவனுள்ள மட்டும் ஊழியம் செய்தாள்.

1. பிசாசுகள் ஆளுதல் – என்றால் நமது புத்தி, சித்தம் ஆவியை அவை கெடுத்தல் ஆகும்.
2. மூர்க்கமான துர்க்குணங்கள் செய்கைகள் செய்ய ஏவுதல்.
3. துன்மார்க்கச் செய்கைகள் செய்ய ஏவுதல்.
4. நோய்களால் நம்மை வாதித்தல் போன்றவை.

எடுத்துக்காட்டுக்குக் கூனியான பெண். (நாம் பிசாசு பிடித்தவள் என மாட்டோம். ஆனால் ஆண்டவர் அவளை சாத்தானால் கட்டப்பட்டவள் என்றார்). பிசாசுகள் பலவிதமாய்க் கிரியை செய்யும். சிலரிடம் கொஞ்சமாய், லேசாய், அதிகமாய், முழுவதுமாய் அலைக்கழிக்கும். மரியாளை அலைக்கழித்ததெதுவோ, எப்படியோ என்பதை நாம் அறியோம். ஆனால் ஏழு பிசாசுகள் அவளை எவ்வளவாக அலைக்கழித்திருக்க வேண்டும்!

1. பைத்தியமோ, வியாதியோ, வலிப்பு நோயோ, சரீர இச்சைகளோ எதுவோ – அதிகாரிகள் இவளை ஜெப ஆலயத்தை விட்டும் நீக்கிவிட்டார்கள். ஊராரும் தள்ளினார்கள். இரட்சகரோ அவளைச் சேர்த்துக் கொண்டார்.

2. ஆண்டவர் நடப்பிக்கும் மாறுதல்

நம்மை முன் தெரிந்து கொள்ளுகிறார். நாம் பிந்தி நம்மை அவருக்கு ஒப்புக் கொடுக்கிறோம். உதாரணமாக, 1. பவுல் 2. மகதலேனா மரியாள். இரும்பைக் காந்தம் இழுப்பதைப் போல் இழுத்துக் கொள்ளுகிறார்.

3. மரியாள் கிறிஸ்துவின் அடியாள்

ஐந்து இடங்களில் அவளைக் காணலாம்.

1. அவள் திருப்பணிவிடை

அவர் சீஷரோடு சென்றபோது ஸ்திரீகளும் கூடச்சென்று பணிவிடை செய்தார்கள். அவர்களில் ஒரு பெண் மரியாள். அவர்கள் தங்கள் ஆஸ்திகளால் இயேசுவுக்கு உணவளித்து உற்சாக மூட்டினவர்கள். (லூக்கா 8:1–2)

2. சிலுவையினடியில்

தாயாரோடும், தாயார் சீஷனோடு சென்ற பின்னும், மகதலேனாள் அடக்கத்திலும் மரியாதைக் கண்ணீர் சிந்தினாள்.

மத் 27:55, 56, 61, மத் 28:1, லூக்கா 8:2, மாற்கு 16:9, லூக்கா 24:10, யோ 19:25 காண்க.

20. சேபாவின் ராஜஸ்திரீ

(1 ராஜா 10:1–13)

முகவுரை : இவள் அரேபியாவின் தென் பாகத்திலுள்ள சேபாவின் ராணி. சேபாவுக்கும் எருசலேமுக்கும் ஆயிரம் மைல். சாலமோனின் கீர்த்தியை அறியாதோரில்லை. ஞானத்திலும், ஐசுவரியத்திலும் ஒப்பற்றிருந்தான்.

சேபா ராஜஸ்திரீயைப் பற்றிய நான்கு குறிப்புகள் :

1. அவளுடைய கேள்வி

சாலமோனைப் பற்றி எவ்வளவோ கேள்விப்பட்டிருந்தாள். ஆனால் நம்பவில்லை. கிறிஸ்துவைப் பற்றியும் எவ்வளவோ கேட்டும் நம்பாதவர்கள் அநேகர் நம்மிலுண்டு. நம்பினால் ஜீவியம் மாறும். கஷ்ட, துக்க, துன்ப, சோர்வு, சோதனை போன்றவை. தரிசித்து அல்ல, விசுவாசித்து நடக்கிறோம். விசுவாசத்தால் நீதிமான் பிழைப்பான். விசுவாசிக்கிறவன் கெட்டுப் போகமாட்டான். விசுவாசிகள் இரட்சிக்கப்படுவார்கள்.

2. அவள் சந்திப்பு

சாலமோனைச் சந்தித்துப் பேசி, யாவும் உண்மையா என்றறியும்படி நீண்ட பிரயாணம் செய்து வந்தாள். அரசனைக் கண்டதும் சகலமும் மாறிவிட்டது. அவருடைய ஞான ஐசுவரியம் கண்டு பிரமித்தாள். கேள்வி ஜீவியத்திற்கும், காண்கிற ஜீவியத்திற்கும் வித்தியாசம் உண்டு. கேள்வி ஜீவியம் சந்தேகமுள்ளது. காணும் ஜீவியம் நிச்சயமுள்ளது. சமாரியர் அவரைப் பற்றிக் கேள்விப்பட்டிருந்தும், அவ்ரைக் கண்டு அவரோடு தங்கினபோது, அவர் மெய்யாகவே கிறிஸ்துவாகிய உலக இரட்சகரென்றறிந்து ஆசீர்வாதம் பெற்றார்கள். (யோவான் 4)

3. அவளுடைய அறிக்கை

கேள்விப்பட்டதெல்லாம் மெய்யாயிற்று. அப்போது நம்பவில்லை. பாதி கூட அறிவிக்கப்படவில்லை. கேள்விப் பட்டதிலும் உம் ஞானம், செல்வம் அதிகம் என்று அறிக்கையிட்டாள். உமது ஜனங்களும், ஊழியக்காரரும் பாக்கியவான்கள் என்றாள். நாம் கர்த்தரைச் சந்திக்கும்போதுதான் நாம் கேள்விப்பட்டதைப் பார்க்கிலும், அவர் அதிக அன்பும் கிருபையுமுள்ளவர் என்று அறிந்து அறிக்கை செய்வோம்.

4. வெகுமதிகள் மாற்றல்

இந்தராணி பொன், கந்தவர்க்கங்கள், இரத்தினங்கள் ஏராளமாய் ராஜனுக்களித்தாள். சாலமோன் ராணிக்கு வெகுமதிகளை கொடுத்ததுமன்றி, அவள் விரும்பிக் கேட்ட எல்லாவற்றையும் கொடுத்தான். அதுபோலவே ஆண்டவருக்கு நாம் கொடுக்கிறோம். அவரும் நமக்குக் கொடுக்கிறார். விசுவாசம், நம்பிக்கை, அன்பு, கீழ்ப்படிதல், பணிவிடைகள் ஆகியவற்றை இருதயத்திலிருந்து அவருக்குக் கொடுக்கிறோம். உலகம் கொடுக்கக்கூடாத ஒப்பற்ற நித்திய ஆசீர்வாதங்களை அவர் நமக்குக் கொடுக்கிறார்.

“நான் அவனோடு போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான்” என்ற வாக்கு நிறைவேறுகிறது.

5. ராணி சாலமோன் ஞானத்தைக் கேட்க வந்தாள்.

“சாலமோனிலும் பெரியவர் இங்கே இருக்கிறார்”. மத் 12:42 (1) மெய்தேவ வணக்கமற்றவள் சாலமோனின் கடவுளைக் கண்டாள். தேவனை ஸ்தோத்தரித்தாள். 2. சாஸ்திரிகளைப் போலத் தூர விழுந்து அதே காணிக்கை படைத்தாள். 3. சாலமோனைவிடப் பெரியவரே ஞானத்தைக் கொடுத்தார். 4. கர்த்தர் கொடுக்கும் ஞானம் : யாக் 3:17 நீதி 1:7 சங்கீதம்

119:97–112 = 1 பேதுரு 2:2–3 காண்க.

இவளைப் போன்றே சங்கீதக்காரனின் வேத வாஞ்சையும் அனுபவ சாட்சியும்

1. அது நாள் முழுவதும் அவர் தியானம் (97)

2. அவர் வாய்க்கு தேனிலும் மதுரம் (103)

3. அவர் கால்களுக்கு தீபம், பாதைக்கு வெளிச்சம் (105)

வேதத்தால் அவர் அடைந்த நன்மைகள்

1. தன் சத்துருக்களை விட ஞானமுள்ளவரானார். (98)

2. முதியோர்களைவிட ஞானமுள்ளவரானார் (100)

3. தன் ஆசிரியர்களைவிட அறிவுள்ளவரானார் (99)

அவர் செய்தவைகள்

1. பொல்லாத வழிகளை விட்டுத் தம் கால்களை விலக்கினார் (101)

2. பொய் வழிகளை வெறுத்தார் (104)

வேத மகத்துவங்களை ஆராய, ஆராய, அவை நம் புத்திக் கெட்டாததாயிருக்கின்றன. உன் அனுபவம் என்ன? அதிகாலை வாசிப்போடே உன் தியானம் நின்று போய்விடுகிறதா? திரும்பவும் ஒரு நாளில் அதை எத்தனை தரம் கையிலெடுக்கிறாய்? "இரவும் பகலும் கர்த்தருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்".

ஆண்டவரே, உம்முடைய வேதத்திலுள்ள அதிசயங்களை நான் பார்க்கும்படி என் கண்களைத் திறந்தருளும். உம் செய்தியைக் கேட்க என் செவிகளையும், நீர் உணர்த்துகின்ற உண்மைகளை ஏற்றுக் கொள்ள என் இருதயத்தையும் திறந்தருளும்.

21. கிறிஸ்துவும் மாதரும்

முகவுரை

இரண்டு பிரிவுகள் : 1. கிறிஸ்துவும் மாதரும்

2. திருச்சபையும் மாதரும்

I. கிறிஸ்துவும் மாதரும்

அ. கிறிஸ்து ஸ்திரீகளை மேன்மைப்படுத்தினார். ஸ்திரீயின் மூலமாகவே உலகில் அவதரித்தார்.

ஆ. ஸ்திரீகளோடு நட்புக் கொண்டார். மார்த்தாள், மரியாள் மற்றும் சிலர் அவருக்குப் பின்சென்று வந்தார்கள் (லூக் 8:1–3)

இ. ஸ்திரீகளைப் பாராட்டி மெச்சிக் கொண்டார்.

1. மரியாள் – "எடுபடாத நல்ல பங்கு" லூக்கா 10:46
2. பரிமளம் ஊற்றிய ஸ்திரீ. மாற்கு 14:6,8,9

நற்கிரியை செய்திருக்கிறாள்.

தன்னால் இயன்றதைச் செய்தாள்.

முந்திக் கொண்டாள் (கனம் பண்ணுவதில்)

உலகத்தில் சுவிசேஷம் எங்கெங்கே பிரசங்கிக்கப்படுமோ அங்கெல்லாம் இவளை நினைப்பதற்காக இவள் செய்ததும் சொல்லப்படும்.

ஈ. விதவையின் இரண்டு காசு. லூக்கா 21:3

உ. பாவிகளான ஸ்திரீகளை மன்னித்து ஏற்றுக் கொண்டார்.

1. சமாரிய ஸ்திரீயை முதல் சுவிசேஷகியாக உபயோகித்தார்.

2. விபச்சாரத்தில் பிடிக்கப்பட்ட ஸ்திரீயிடம் கனிவாகப் பேசி அவளை நல்வழிப்படுத்தினார்.

ஊ. சில ஸ்திரீகளின் வியாதிகளை நீக்கினார்

1. பேதுருவின் மாமி

2. பெரும்பாடுள்ள ஸ்திரீ

3. கூனியான ஸ்திரீ

4. ஏழு பிசாசுகள் பிடித்திருந்த மரியாள்

எ. ஸ்திரீகளின் சஞ்சலத்தை நீக்கிச் சந்தோஷமும், சமாதானமும் கொடுத்தார்.

1. மார்த்தாள், மரியாள் – லாசருவின் மரணத்தின் போது யோவான் 11

2. சிரோப்பெனீக்கிய ஸ்திரீயின் மகளுக்குச் சுகமளித்தார். மத். 15

3. நாயீனூர் விதவையின் மகனுக்கு உயிர் கொடுத்தார். லூக்கா 7:11–17

4. மரியாளுக்குத் தம் உயிர்த்தெழுதலுக்குப் பின் முதற்காட்சி அருளினார்.

II. திருச்சபையும் மாதரும்

அ. சென்ற இடங்களிலெல்லாம் பின் சென்றார்கள். ஊழியத்தில் ஈடுபட்டார்கள். லூக்கா 8:1–3.

ஆ. பணிவிடை செய்தார்கள்.

திரவிய உதவி, ஆகாரம், உடை, மரண சமயம், காடி, மயக்க மருந்து உதவி.

இ. அவர் மரணத்தில் – கொல்கதா யாத்திரை, அடக்கத்தில் சுகந்தவர்க்கமிட மூன்றாம் நாள் காலையில்.

ஈ. மேல் அறையிலும் இருந்தார்கள் – உயிர்த்தெழுதலுக்குப் பின் எருசலேமில் சீடர்கள் கூடிவந்தபோது.

3. கிறிஸ்தவ மாதர்

ஸ்திரீகள் கிறிஸ்துவின் பார்வையில் அருமையானவர்கள். ஆதி காலத்தில் ஸ்திரீகள் அவரோடே வாசம் செய்து, அவருக்குப் பணிவிடை செய்து, அவரோடே ஊழியம் செய்து, அவரிடம் அநேக நன்மைகள் பெற்றார்கள். அவர் ஜீவிய முழுவதிலும், மரணத்திலும், சிலுவையடியிலும், கல்லறையிலும், பெந்தெகொஸ்தேயிலும் அவர்கள் அவரை விடவில்லை. நம்மை அவர் பாராட்டுவது போல நாம் அவரைப் பாராட்டுவோமானால், இந்த ஸ்திரீகள் பெற்ற எல்லா நன்மைகளையும் நாமும் பெறுவோம் என்பதற்கு ஐயமில்லை. நன்மைகளைப் பெற்று அனுபவிக்கும் நாம் நம் ஜீவிய சேவையின் மூலம் நன்றி காட்டுவோம்.

“ஆண்டவா உன்றன் சேவைக்கடியேன் அர்ப்பணம் செய்ய தூண்டும் உன் ஆவியருள்வாய்”. (கீர்த்தனை 329)

(கடவுளுக்குத் தங்களை ஒப்புக் கொடுத்த ஸ்திரீகள்)

1. கடவுளோடு இருந்தார்கள்.

2. கடைசி மட்டும் சேவை செய்தார்கள்.

3. மேலறையிலே ஜெபத்தாலே, பரிசுத்த ஆவியைப் பெற்று சாட்சி கூறினார்கள்.

22. திருச்சபையும் ஸ்திரீகளும்

I. திருச்சபையில் ஸ்திரீகள் எப்படி ஊழியம் செய்தார்களென்பதைக் கவனிப்போம்.

சுவிசேஷங்களின் மூலம் ஸ்திரீகள் சேவையை முந்தின உரையில் அறிந்து கொண்டோம். அப்போஸ்தலர் நடபடிகளில் –

1. தொற்காள் (அப்.9)

2. லீதியாள் (அப்.16) ஆகிய இருவரைச் சிறப்பாகப் பார்க்கிறோம்.

நிருபங்களைப் பார்ப்போம்.

1. சிந்திகேயாள் – எயோதியாள் – பிலிப்பி சபையில் பெரியோர்கள்

2. பெபேயாள் – ரோமர் 16:1–2

3. தீமோத்தேயுவின் பாட்டி லோவிசாள், தாய் ஐனிக்கேயாள் 2 தீமோ. 1:5

4. பிரிஸ்கில்லாள்–ரோமர் 16:3–5

   1. பவுலுக்கு உடன் ஊழியம்

   2. வீட்டில் உபசரிப்பு

   3. அப்பொல்லோவிற்கு ஞானபோதகம் செய்தார்.

ரோமர் பதினாறாம் அதிகாரத்தில் ஸ்திரீகளின் சேவையே மிகுதியாகச் சொல்லப்படுகின்றது.

1–2 பெபேயா

3–5 பிரிஸ்கில்லாள்

6 – மரியாள்

12–13 கடைசி பாகமும் காண்க.

II. பிந்திய நூற்றாண்டுகளில் ஸ்திரீகள் ஆற்றிய சேவை

1. பரி. அகஸ்தீனுடைய தாயார்.

2. அமெரிக்காவின் பெரிய பிரசங்கியார் டோரி (Torrey) என்பவரின் தாயார் "God of your mother" (My mother's God)

3. திருச்சபைச் சரித்திரத்தில் சிரிலு என்பவருடைய தாயார் (ஜெபம், சேவை, சாட்சி)

III. தற்காலத் திருச்சபையில் நம் சேவை, கடமை என்ன?

1. நாமும் நம் பிள்ளைகளும் நம் குடும்பமும், கிறிஸ்தவ ஒழுக்கத்தில் வளருகிறோமா?

2. திருச்சபையின் எல்லாச் சட்டதிட்டங்களுக்கும் அடங்கி ஜீவிக்கிறோமா?

அ. தருமம், ஆராதனை, சட்டங்கள் – ஒத்துழைத்தல் ஆகியவை முக்கியமானவை.

ஆ. சபையோடு ஐக்கியம்

இ. நம் திரவிய சகாயம் பத்தில் ஒன்று, சந்தாக்கள், அன்பளிப்புகள்.

ஈ. தேவ ஊழியத்தைத் தாங்குதல் "அந்நியரை உபசரிக்க நாடுதல்"

உ. சேவையும் சாட்சியும்

IV. சேவை ஒத்துழைப்பு

அ. சபையின் எல்லாக் கூட்டங்களிலும் பங்கெடுத்தல்

ஆ. ஒய்வு நாள் பள்ளிக்கூடம்

இ. கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம்

ஈ. சகோதரிகளின் ஐக்கிய சங்கம், கிராம ஸ்திரீகளுக்கான வகுப்புகள்

உ. விசேஷக் கூட்டங்களில் பங்கெடுத்தல். மற்றவர்களையும் அழைத்துச் செல்லல்.

ஊ. நம் வீடுகளில் கூட்டங்கள் ஒழுங்குபடுத்தி அயலகத்தாரை அழைக்கலாம். கொர்நெலியு.(அப்.10)

எ. மற்றோரைச் சந்திக்கலாம்.

1. வியாதியஸ்தர் 2. துக்க வீட்டார் 3. கஷ்ட நஷ்டத்திலிருப்போர் 4. புதிதாய் வரும் சபையார் போன்றவர்கள்

ஏ. சபையின் ஏழைக் கிறிஸ்தவர்களுக்கு உதவி செய்யலாம்.

1. உழைக்கக் கூடியவர்களை வேலைக்கமர்த்தலாம்.

2. பணமோ, ஆகாரமோ, உடையோ கொடுக்கலாம்.

V. சாட்சி

1. படிப்பறிவற்றோருக்கு வேதக் கதைகளும் ஜெபமும் கற்பிக்கலாம்.

2. புஸ்தகம் வாங்கத் திறமையற்றோருக்கு வாங்கிக் கொடுக்கலாம்.

3. இந்து சிநேகிதர் மற்றும் கிராமத்தார்களுக்குச் சுவிசேஷத்தை எடுத்துக் கூறலாம். கூடுமானால் ஆராதனைக்கழைக்கலாம்.

4. பிரயாசப்பட்டு நம் வட்டாரத்திலுள்ள எல்லாக் கிராமங்களிலும் பெண்கள் ஐக்கிய சங்கக் கிளைகளை ஏற்படுத்தலாம்.

எல்லாவற்றிற்கும் மேலாக மூன்றுவிதமான சாட்சிகளில் ஈடுபடலாம்.

திரவிய சாட்சி – ஜீவிய சாட்சி – ஜெப சாட்சி.

வேறு வார்த்தைகளில்: கொடுக்கலாம் – உழைக்கலாம் – ஜெபிக்கலாம். பிலி. 4:8 வாசிக்கவும்.

நற்செய்திச் செல்வராகத் திகழ்ந்த திருமதி. ராஜம்மாள் டிக்கிகஸ் (1909–1988) அவர்கள் வேலூரிலுள்ள ஆற்காடு இறையியல் கல்லூரியில் தம் கணவர் அருள்திரு. எபநேசர் டிக்கிகஸ் அவர்களோடு சேர்ந்து முப்பதாண்டுகளுக்கும் மேலாகத் திருப்பணி ஆற்றியதோடு திருச்சபையில் பெண்கள் ஐக்கிய சங்கம், கிறிஸ்தவ பக்தி முயற்சி சங்கம் ஆகியவற்றிலும் பொறுப்புள்ள ஊழியம் செய்துள்ளார்கள். ஒய்வுபெற்ற பின்பும் ஜெப ஊழியத்தில் தம்முடைய 79–ஆவது வயதுவரை ஈடுபட்டிருந்தார்கள்.

சிறுவர்களின் பக்தி வளர்ச்சிக்கென்று அவர்கள் எழுதிய இருபத்தைந்து எடுத்துக்காட்டுக் கதைகளைக் கொண்ட சிறுவர்களே உங்களுக்கு மற்றும் பலஸ்தீனா என்னும் புனித நாடு, அப்போஸ்தலர் நடபடிகள் (தியானக் குறிப்புகள்) மாபெரும் அப்போஸ்தலர் பேதுரு ஆகிய நூல்களைத் தொடர்ந்து இந்நூல் அவர்களின் 92–ஆவது ஆண்டு தொடங்கியுள்ள கட்டத்தில் வெளிவருகின்றது.

CLS

IVARGALAICH CHANDIYUNGAL

By ***Rajammal Tychicus***

விலை ரூ. 12.00 (இந்தியாவில் மட்டும்)